# வானவில்

VAANAVIL

இதழ் - 84
மார்கழி 2017

ISSUE – 84
DECEMBER 2017


### உள்ளூராட்சித் தேர்தல்:

# ‘நல்லாட்சி’ அரசுக்கும் அடிவருடிகளுக்கும் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு!

**‘நல்**லாட்சி’ அரசாங்கம் பல்வேறு சாக்குப் போக்குகளைச் சொல்லி இரண்டு வருடங்களுக்கும் மேலாக உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடாத்தாது இழுத்தடித்துவிட்டு இறுதியாக அடுத்த வருட முற்பகுதியில் தேர்தலை நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. அதன் அடிப்படையில் வேட்பு மனுக்கள் கோரப்பட்டு கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணத்தைச் செலுத்தி வருகின்றன.

இந்தத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர்தான் எமது நாட்டின் அரசியல் கலாச்சாரத்தில் உள்ள அநாகரிகமான போக்குகளும், எமது ஜனநாயகத்தில் உள்ள ஓட்டை ஒடிசல்களும் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு வெளிப்படத் தொடங்கியுள்ளன.

இதுவரை காலமும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் போல நடித்த சில அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும், பங்காளிக் கட்சிகளும், பதவி என்று வந்ததும் அடிதடியிலும், குடுமிப்பிடிச் சண்டையிலும் இறங்கியுள்ளனர். பலர் தமது கட்சிகளில் இருந்து வெளியேறி புதிய கூட்டணிகளை ஆரம்பித்துள்ளனர். கட்சித் தாவல்களும் தாராளமாக நடைபெறுகின்றன. அரசாங்கமும் அதன் மேல்மட்டத் தலைவர்களுமே கட்சித் தாவல்களை ஊக்குவிக்கின்றனர். அப்படித் தாவுபவர்களுக்கு இலஞ்சமாக பதவிகளும் வழங்கப்படுகின்றன.

இந்தத் தேர்தல் திருவிழா காட்சிகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அலங்காரத் திருவிழாதான் மிகவும் சுவாரசியமாகக் காட்சியளிக்கிறது. புலிகளால் தமது தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு, புலிகள் இல்லாத இந்தக் காலகட்டத்தில் பதவிப் போட்டிகளால்




சிதறு தேங்காயாக மாறியுள்ளது.

சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப் ஏற்கெனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி, வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறது. சுரேஸ் இந்தத் தேர்தல் அறிவிக்கப்பட முன்னரே கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சியின் எதேச்சாதிகாரம் பற்றி அடிக்கடி பேசி வந்த ஒருவராவார்.

சுரேஸ் வெளியேறிய பின்னர் உள்ளூராட்சி சபை ஆசனப் பங்கீடு சம்பந்தமாக கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மற்றைய இரு கட்சிகளான ரெலோ, புளொட் என்பனவற்றிற்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது. இந்த முறுகலைச் சமாளிப்பதற்காக தமிழரசுக் கட்சியின் கொழும்புத் தரகர் சுமந்திரன் ஓடிஓடி ‘அலுவல்’ பார்த்தும் நிலைமை சீரானதாகத் தெரியவில்லை. அதனால் இந்தத் தேர்தலில் இருந்தே ஒதுங்குவது குறித்து ரெலோவும், புளொட்டும் ஆலோசித்து வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுதான் எமது தமிழர் அரசியலின் இன்றைய இலட்சணம்.

அதேநேரத்தில் தென்னிலங்கையிலும் இவ்வாறான கூத்துகள் நடைபெறாமல் இல்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறி ஐ.தே.க. கட்சியுடன் சேர்ந்து அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது துரோகம் மக்களிடம் எடுபடவில்லை என்றதும் மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியை வளைத்துப் பிடித்து தனது வெற்றி வாய்ப்பைப் பெற எடுத்த முயற்சி தோல்வி கண்டுவிட்டது. இதனால் “சீ..சீ இந்தப் பழம் புளிக்கும்” என்ற நிலையில் இருக்கின்றார்.

இது ஒருபுறமிருக்க, நாட்டின் அரசியல் கலாச்சாரம் இப்படி இருக்கிறது என்றால், எமது தேர்தல் முறையிலுள்ள குழறுபடிகள் எமது ஜனநாயகத்தின் இலட்சணத்தை

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

# பலஸ்தீனம்: புதிய சிந்தனை, போராட்ட முறை அவசியம்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஜெருசலேம் நகரினை இஸ்ரேலின் தலைநகராக அறிவித்து, டெல் அவிவ் நகரிலுள்ள அமெரிக்கத்தூதரகத்தை ஜெருசலேத்திற்கு மாற்றவும் உத்தரவிட்டுள்ளார். வரலாற்றில் இஸ்லாமிய, யூத, கிறிஸ்தவ என்ற மூன்று மத அடையாளங்களையும் கொண்ட முக்கிய நகரமாக ஜெருசலேம் விளங்குகின்றது. இதனால் பலஸ்தீன மக்களும் தங்களுக்கென்று அமையவுள்ள தனிநாட்டில் ஜெருசலமே தலைநகரமென நீண்டகாலமாகக் கோரி வருகிறார்கள். முதலாளித்துவ ஜனநாயத்தின் முன்னேறிய நாடாக வர்ணிக்கப்படும் ஐக்கிய அமெரிக்க நாட்டின் வரலாற்றில் மிகவும் மோசமான ஜனாதிபதியாக வர்ணிக்கப்படும் டொனால்ட் ட்ரம்ப்பின் ஒருதலைப் பட்சமான இந்த அறிவிப்பால், உலகிலுள்ள சகல இஸ்லாமிய நாட்டு மக்களும் கொந்தளித்து எழுந்துள்ளார்கள்.

வல்லரசுகளால் நவீன இஸ்ரேல் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னரான 3500 ஆண்டுகால யூதர்களின் வரலாறு முழுவதும் இடப்பெயர்வுகளால் நிறைந்தது. 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தேசிய இனங்கள் தொடர்பாக ஏற்பட்ட மாற்றங்களினால் உந்தப்பட்டே, யூதர்கள் தங்களுக்கென்றொரு நாடு அமைக்கும் திட்டத்தை ஆரம்பித்தனர். யூதர்களின் பூர்விக இருப்பிடமாக பலஸ்தீன நிலப்பரப்பு இருந்ததால், அந்நிலப்பரப்பே அவர்களது இயல்பான தேர்வாக அமைந்தது.1882 ஆம் ஆண்டில், ஐரோப்பாவிலிருந்து யூதர்கள் பலஸ்தீனத்துக்கு முதற்குழுவாக குடியேற ஆரம்பித்ததிலிருந்து சியோனிஸ்ட் (யூத இன) இயக்கம் தொடங்கியது.

பழைய பலஸ்தீனம் (தற்போதைய இஸ்ரேல்-பலஸ்தீனம் என்ற மொத்தப்பகுதி) 26600 சதுர கிலோமீட்டர் பரப்பளவினைக் கொண்டது. (இலங்கையின் நிலப்பரப்பு 65610 சதுர கிலோ மீட்டர்). இதில் இன்றைய இஸ்ரேலின் நிலப்பரப்பளவு: 20000 சதுர கிலோமீட்டர். ஓட்டோமான் பேரரசின் கீழிருந்த பலஸ்தீனம், முதலாம் உலகப்போர் காலகட்டத்தில் எகிப்திய உதவியுடன் பிரிட்டனின் கீழ் வந்தது. அப்போது (1917 ஆண்டில்) அரேபியர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த பலஸ்தீன நிலப்பரப்பில் யூத நாடு ஒன்றினை அமைப்பதற்கு பிரிட்டன் ஆதரவளிப்பதாக அறிவித்தது. அதன் பின்னரே பலஸ்தீனர்களுக்கும் யூதர்களுக்குமிடையிலான இனமோதல்கள் காலத்துக்கு காலம் நிகழ ஆரம்பித்தன.

1946 இறுதியில், 1,269,000 அரேபியர்களும், 608,000 யூதர்களும் பலஸ்தீனப் பகுதிக்குள் வாழ்ந்து வந்ததாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இரண்டாவது உலகப் போர் முடிந்து இரண்டு ஆண்டுகளில் பலஸ்தீனத்தை ஐக்கிய நாடுகள் சபை அரபு, யூத இனத்தவர்கள் வாழும் பகுதியென இரண்டாகப்பிரித்து ஜெருசலம், பெத்தலேகம் போன்ற நகரங்களுக்கு விசேட அந்தஸ்தினையும் வழங்கியது. இதைத் தொடர்ந்து 1948 ஆம் ஆண்டு ஐ.நா.சபை இஸ்ரேலை தனிநாடாக அறிவித்தது. ஐ.நா.சபையின் இரு நாட்டுத்திட்டத்தை இஸ்ரேலிய யூதர்கள் கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட போதிலும், தமது எல்லைகளை மேலும் விரிவாக்கும் அகன்ற இஸ்ரேல் திட்டத்தினை அப்போதே கொண்டிருந்தனர். ஐ.நா.சபையின் இரு நாட்டு அறிவிப்பினை நிராகரித்த சிரியா, எகிப்து, ஜோர்டான் போன்ற அரபு நாடுகள் இஸ்ரேலின் மீது தாக்குதல் நடாத்தின. இஸ்ரேலிற்கும் அரபு நாடுகளுக்குமிடையேயான அந்த யுத்தம் 1949 ஆம் ஆண்டு முடிவிற்கு வந்தபோது, ஜெருசலேத்தின் மேற்கு பகுதியை இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. மேற்குக்கரை என அழைக்கப்படும் ஜோர்டான் நதியின் மேற்குப் பகுதியில் இருக்கும் பரவலான பகுதியை ஜோர்டான் நாடு எடுத்துக்கொண்டது, கிழக்கில் மத்தியதரைக் கடலை ஒட்டியிருக்கும் காஸா என்ற பகுதி எகிப்தின் கீழ் வந்தது.

1964 ஆம் ஆண்டு பலஸ்தீன விடுதலை இயக்கம் நிறுவப்பட்டு, இஸ்ரேலுக்கு எதிராக மீண்டுமொரு யுத்தம் அரபுநாடுகளால் 1967 ஆம் ஆண்டு தொடுக்கப்பட்டு, அரபு நாடுகள் படுதோல்வி அடைந்தன. இந்த யுத்தத்தில் கிழக்கு ஜெருசலேமும் மேற்குக் கரையும் காஸாவும் இஸ்ரேலின் கைக்கு வந்தன. இவ்வாறு கைப்பற்றப்பட்ட சில பகுதிகளே (தற்போது காஸா மற்றும் மேற்குக்கரைப் பகுதிகளை நிர்வாக அலகாகக் கொண்ட பலஸ்தீன அரசு) இன்று பலஸ்தீனம் என்று அழைக்கப்படுகின்றன. 1948 மற்றும் 1967 ஆண்டுகளில் நடந்த யுத்தத்தில் கைப்பற்றப்பட்டு இன்றுவரை இஸ்ரேலினால் ஆக்கிரமிப்பிற்குட்பட்டிருக்கும் பிரதேசங்களில் ஆறு இலட்சம் யூதர்கள் குடியேற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. மேலும் அமெரிக்காவின் பொருளாதார மற்றும் இராணுவ உதவிகளின்றி இஸ்ரேலினால் யுத்தங்களையும் வென்றிருக்கவும், குடியேற்றங்களையும் தொடரவும் முடியாது எனவும் கருதப்படுகின்றது.

ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகரமாக இஸ்ரேல் கருதி வருகின்றது. ஆனால் அதனை பெரும்பாலான உலக நாடுகளோ, டொனால்ட் ட்ரம்ப்பிற்கு முந்தைய அமெரிக்க நிர்வாகங்களோ ஒருபோதும் ஏற்கவில்லை. ஜெருசலேம் நகரினை ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசமாகவே ஐ.நா. சபையும் கருதுகின்றது. இவ்வாறு பலஸ்தீன மக்களின் போராட்டத்திற்கு உலக மக்களின் ஆதரவு இருந்தபோதிலும், கடந்த 70 வருடங்களாக அவர்களால் எதனையும் சாதிக்க முடியவில்லை. இதற்கு அமெரிக்கா என்ற நாடே முழுக்காரணம். அமெரிக்கா, ஒருபுறத்தில் இஸ்ரேலின் எண்ணங்களுக்கு பரிபூரண ஆதரவை வழங்குவதோடு நின்றுவிடாது, மறுபுறத்தில் இஸ்ரேலின் உருவாக்கத்திற்கு எதிராக பலஸ்தீனர்களை ஆதரித்து வந்த அரபு-இஸ்லாமிய நாடுகளைப் பிளவு படுத்தி பலவீனப்படுத்துவதிலும் (உதாரணம்: ஈராக், டுனீசியா, லிபியா, சிரியா, யேமன்) முன்னின்று செயற்படுகின்றது. அதேபோல மத்திய கிழக்கு ஆசியாவிலுள்ள எண்ணெய் வளமிக்க அரபு நாடுகளினதும் (சவூதிஅரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், பஹ்ரேன், கட்டார்) எகிப்தினதும் ஆட்சியாளர்களை தனது வலைக்குள் வீழ்த்தி இஸ்ரேலிற்கு எதிராக முழுமூச்சாக செயற்படாது தடுத்து வைத்திருக்கினறது. இதனால் உலகின் நான்கில் ஒரு பங்கு சனத்தொகையைக் கொண்டிருக்கும் இஸ்லாமியர்கள், மத அடிப்படைவாதத்தைக் கையிலெடுப்பதற்குப் பதிலாக, இன, மத, வர்க்க ரீதியாக ஒடுக்கப்படும் ஏனைய மக்களுடன் கைகோர்த்து சகல ஒடுக்குமுறையாளர்களுக்கும் எதிராகப் போராடுவது பற்றி சிந்திக்க வேண்டும்.


**வானவில்**

தொடர்பு மின்னஞ்சல் முகவரி: sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

இணையத்தளம்: http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.

# உலகிற்கு அமெரிக்கா அளித்த
# *புரட்சிப் பெண் அன்னா லூயிஸ் ஸ்ரோங்!*



**20**ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த, உலக மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட முற்போக்குப் பெண்மணிகளின் வரிசையில் அமெரிக்காவைச் சேர்ந்த அன்னா லூயிஸ் ஸ்ரோங் (Anna Louis Strong) மிக முக்கியமான ஒருவராகும்.

அமெரிக்காவில் 1885 நொவம்பர் 24ஆம் திகதி பிறந்த ஸ்ரோங், 1970இல் சீனத் தலைநகர் பீஜிங்கில் தனது 84ஆவது வயதில் இறக்கும் வரை பெண்கள், குழந்தைகள், தொழிலாளர்கள் மற்றும் சமூகத்தின் நலிவுற்ற பகுதி மக்களுக்காகவும், சோசலிச இலட்சியத்துக்காகவும் தொடர்ச்சியாகப் பாடுபட்ட ஒருவராவார்.

அமெரிக்காவில் Sydney Dix Strong என்ற கிறிஸ்தவ மத போதகர் ஒருவரின் மகளாகப் பிறந்த ஸ்ரோங், சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் தனது 23ஆவது வயதில் தத்துவவியலில் கலாநிதி பட்டப்படிப்பை முடித்த பின்னர் பொது வாழ்வில் ஈடுபட ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் குழந்தைகள் நலன் சம்பந்தமான வேலைகளில் ஈடுபட்ட அவர், அது சம்பந்தமான கண்காட்சிகளை அமெரிக்காவிலும் ஏனைய நாடுகளிலும் நடாத்தியதுடன், சொற்பொழிவுகளையும் நடாத்தினார். அவரது உரைகளைக் கேட்க 6,000 முதல் 40,000 ஆயிரம் வரை மக்கள் திரண்டார்கள்.

சீட்டில் (Seattle) நகரில் அவர் வசித்த காலத்தில் 1916இல் பாடசாலைச் சபைக்குத் தெரிவான ஒரேயொரு பெண்மணியாகத் திகழ்ந்தார். குழந்தைகளின் நலனில் அக்கறை செலுத்தியதின் காரணமாக அவரால் பெண்கள் அமைப்புகளினதும், ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட தொழிலாளர் அமைப்புகளினதும் ஆதரவைச் சுலபமாகப் பெற முடிந்தது.

உழைக்கும் மக்களின் ஏழ்மையைக் கண்டு துன்புற்ற அவர், உள்ளூர் பத்திரிகைகளில் அவர்களுக்கு ஆதரவான பல கட்டுரைகளை எழுதினார். அத்துடன் பாடசாலைகளில் சமூக நல நிகழ்ச்சித் திட்டங்களைச் சேர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அவரது இடதுசாரிப் போக்கை அவதானித்த பாடசாலைச் சபை அவரை அதிலிருந்து வெளியேற்றியது. தான் வெளியேற்றப்பட்டாலும் அந்த இடத்துக்கு இன்னொரு பெண்தான் நியமிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி அதில் வெற்றியும் பெற்றார்.

## தவம்

இந்த நிலைமையில் 1917இல் அமெரிக்கா முதல் உலகப் போரில் இறங்கியதை ஸ்ரோங் கடுமையாக எதிர்த்தார். பாடசாலைகளில் இராணுவப் பயிற்சி வழங்கியதை அவர் எதிர்த்த போது, அவரை பெற்றோர் – ஆசிரியர் சங்கங்களும், மாதர் சங்கங்களும் ஆதரித்து நின்றன. ஆனாலும் அவரை தேசப் பற்றற்றவர் என ஸ்பானிய – அமெரிக்க போரில் ஈடுபட்ட முன்னாள் அமெரிக்கப் படை வீரர்கள் விமர்சித்தனர்.

The Union Record என்ற தொழிற்சங்கப் பத்திரிகை ஒன்றில் வெளிப்படையாக இணைந்த ஸ்ரோங், அதில் தொழிலாளர் ஆதரவுக் கட்டுரைகளையும், சோசலிச சோவியத் அரசாங்கத்துக்கு ஆதரவான கட்டுரைகளையும் துணிந்து எழுதினார்.

1921இல் அமெரிக்க நண்பர்கள் சேவைக் குழுவின் தொடர்பாளராக போலந்துக்கும், சோவியத் ரஸ்யாவுக்கும் சென்று சேவையாற்றினார். அவரது விஜயத்தின் நோக்கம் ‘வொல்கா பட்டினிப் பாதிப்பாளர்களுக்கு’ (Volga Famine Victims) நிவாரணம் வழங்குவதாக இருந்தது. ஒரு வருடத்தின் பின் சர்வதேச செய்திச் சேவையின் மொஸ்கோ நிருபராக அவர் நியமிக்கப்பட்டார். ஐரோப்பாவில் தனது

அவதானங்களை அவர் தனது பல கட்டுரைகளில் பதிவு செய்துள்ளார். அவரது நூல்களில் சில 1924இல் வெளிவந்த First Time in History (இதற்கு லியோன் ட்ரொஸ்க்கி முன்னுரை எழுதியுள்ளார்), மற்றும் 1925இல் வெளிவந்த Children of Revolution என்பனவாகும்.

இந்தக் காலகட்டத்தில் ஸ்ரோங் புதிதாக உதயமான சோசலிச சோவியத் யூனியனின் உறுதிமிக்க ஆதரவாளராக மாற்றமடைந்தார். 1925இல் சோவியத் யூனியனில் 'புதிய பொருளாதாரக் கொள்கை' அமுல் செய்யப்பட்ட போது, ஸ்ரோங் அமெரிக்கா திரும்பி அமெரிக்க முதலீட்டாளர்களை சோவியத் யூனியனில் முதலீடு செய்ய ஊக்குவிக்கும் பல சொற்பொழிவுகளை ஆற்றினார்.

1920 பிற்பகுதியில் ஸ்ரோங் சீனாவுக்கும் வேறு சில ஆசிய நாடுகளுக்கும் பயணங்களை மேற்கொண்டார். சீ ன விஜயத்தின் மூலம் சீனக் குடியரசின் முதலாவது ஜனாதிபதியான டாக்டர் சன் யாட் – சன் (Sun Yat – Sen) அவர்களின் மனைவி சூங் சிங் – லிங்குடனும் (Soong Ching – Ling), பிற்காலத்தில் சோசலிச சீனாவின் முதலாவது பிரதமராகப் பதவி வகித்த சௌ என் லாயுடனும (Zhou Enlai) நட்புறவை வளர்த்துக் கொண்டார். அந்தப் பயணத்தின் பலனாக 1928இல் China's Millions, 1929இல் Red Star in Samarkand என்ற இரு நூல்களை எழுதி வெளியிட்டார்.

1930இல் மொஸ்கோ திரும்பிய அவர், சோவியத் யூனியனின் ஆங்கிலப் பத்திரிகையான 'மொஸ்கோ நியூஸ்' (Moscow News) உருவாக உதவி புரிந்தார். அதில் அவர் முகாமைத்துவ ஆசிரியராகப் (Managing Editor) பணிபுரிந்ததுடன், விவரண கட்டுரையாளராகவும் (Featured Writer) செயலாற்றினார்.

1931இல் ஸ்ரோங் சக பத்திரிகையாளரும், சோசலிஸ்ட்டும், ரஸ்ய யூதருமான Joel Shubin என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். விவசாய நிபுணரான அவரது கணவர் ஸ்டாலின் காலத்தில் சோவியத் யூனியனின் உதவி விவசாய அமைச்சராகவும் பணியாற்றினார். 1942 மார்ச் 24இல் அவரது கணவர் இறக்கும் வரை அவர்கள் இணைபிரியாத் தம்பதிகளாக வாழ்ந்தனர்.

சோவியத் யூனியனில் அன்னா லூயிஸ் ஸ்ரோங் வாழ்ந்த காலத்தில் மிக மகிழ்ச்சியாக இருந்ததுடன், சோவியத் அரசாங்கம் பற்றி பல நூல்களையும் எழுதியுள்ளார். அவற்றில் The Soviets Conquer Wheat (1931), The Revolutionary Struggles from 1927 to 1935(1935), I Change Worlds: the Remaking an American(1935), This Soviet World(1936), The Soviet Constitution என்பவை முக்கியமானவையாகும்.

சோவியத் யூனியனில் இருந்த காலத்தில் அவர் நாட்டின் பல பகுதிகளுக்கும், உக்ரேன், கஸ்நெற்ஸ், கீவ், சைபீரியா,, மத்திய ஆசியா, உஸ்கெக்கிஸ்தான் உட்பட விஜயங்களை மேற்கொண்டதுடன், தொழிலாளர்கள், விவசாயிகள், பாதசாரிகள் எனப் பலதரப்பட்ட மக்களையும் பேட்டி கண்டு பல கட்டுரைகளை எழுதினார். அதே நேரத்தில் போலந்து, ஜேர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தார்.

ஸ்ரோங் ஸ்பெயின் நாட்டுக்கு விஜயம் மேற்கொண்ட பின்னர் அந்நாடு பற்றி Spain in Arms (1937) என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டதுடன், சீனாவைப் பற்றி Fifth of Mankind (1938), என்ற நூலையும் எழுதி வெளியிட்டார். இது தவிர 1940இல் My Native Land என்ற இன்னொரு நூலையும் வெளியிட்டார். போலந்தில் தான் கண்டு கேட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு I Saw the New Poland (1946) என்ற நூலை எழுதினார். தவிர சோவியத் யூனியன் பற்றி The Soviets expected It (1941), Peoples of the U.S.S.R. (1944) என்ற இரு நூல்களையும், Wild River (1943) என்ற நாவலையும் எழுதியுள்ளார்.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது சோவியத் செஞ்சேனை நாஜி ஜேர்மனிக்கு எதிராக முன்னேறிய போது, ஸ்ரோங் செஞ்சேனையுடன் போலந்து வரை பின் தொடர்ந்து சென்றார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி யப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராகவும், சியாங் கே – சேக (Ching Kai – Shek) தலைமையிலான பிற்போக்கு கோமின்டாங் ஆட்சிக்கு எதிராகவும் நடாத்திய நீண்ட நெடும் போராட்டத்தில் ஸ்ரோங் எப்பொழுதும் சீன மக்களுக்கு ஆதரவாக இருந்தார். சீனப் புரட்சியின் தொட்டில் எனக் வர்ணிக்கப்படும் யெனானில் (Yenan) சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 10 ஆண்டுகள் (1936 – 46) தளம் அமைத்திருந்த போது 1946இல் அங்கு விஜயம் மேற்கொண்ட ஸ்ரோங், அங்கு தலைவர மாஓ சே துங் (Mao Zedong) அவர்களைச் சந்தித்து உரையாடினார். அந்த உரையாடல் குறித்து மாஓ "அன்னா லூயிஸ் ஸ்ரோங்குடனான சம்பாசணை" என்ற தலைப்பில் தனியான ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அந்தச் சந்திப்பின் போதுதான் மாஓ முதல் தடவையாக "ஏகாதிபத்தியம் ஒரு கடதாசிப் புலி" என்ற தனது பிரசித்தி பெற்ற கருத்தை அன்னா லூயிஸ் ஸ்ரோங்குடன் பகிர்ந்து கொண்டார்.

சீனாவில் வாழ்ந்த காலத்தில் திபெத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஸ்ரோங், அங்கு முன்னாள் அடிமைகளின் வாழ்வு சோசலிச அமைப்பின் கீழ் எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என்பதை நேரடியாகக் கண்டவற்றை வைத்து When Serfs Stood Up in Tibet என்ற நூலை எழுதி வெளியிட்டார். சீனாவில் வாழ்ந்த காலத்தில் "Letters from China" என்ற தலைப்பில் சீனாவில் நடப்பவை குறித்து தொடர்ந்து வெளியுலகிற்கு எழுதிவந்தார்.

அவரது பிரசித்தி பெற்ற படைப்புகளில் 1954இல் ஸ்டாலின் இறந்த பின்னர் அவர் 1956இல் எழுதிய The Stalin Era என்ற நூல் திகழ்கிறது. இந்த நூல் ஸ்டாலின் ஆட்சிக் காலத்து சாதக பாதக அம்சங்களை உள்ளடக்கிய ஒன்றாகத் திகழ்கின்றது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், சீன மக்களும் அன்னா லூயில் ஸ்ரோங் மீது மிகுந்த மரியாதையும், மதிப்பும் வைத்துள்ளனர். அவர் அங்கு வாழ்ந்த காலத்தில் பிரதமர் சௌ என் லாயின் நெருங்கிய நட்பைப் பெற்றிருந்ததுடன், மாஓவின் மதிப்பையும் பெற்றிருந்தார். மாஓவையும் சௌவையும் அடிக்கடி சந்தித்தவர்களில் ஸ்ரோங்கும் ஒருவராவார்.

சீனத் தலைநகர் பீஜிங்கில் வெளிநாட்டு நண்பர்களுக்கு எனப் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருந்த முன்னாள் இத்தாலிய மாளிகை ஒன்றில் ஸ்ரோங் வாழ்வதற்கு வசிப்பிடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த மாளிகையிலேயே அன்னா லூயிஸ் ஸ்ரோங் 1970 மார்ச் 29இல் இறக்கும் வரை வாழ்ந்தார். அவருக்கு அருகிலேயே பிரபல நியூசிலாந்துக் கவிஞரும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினருமான Rewi Alley (1897 – 1987) அவர்களும் வாழ்ந்தார்.

அன்னா லூயிஸ் இறந்த போது சீன அரசாங்கம் அவருக்கு உயர் கௌரவம் அளிக்கும் வகையில் சீனப் புரட்சிகரத் தியாகிகளை அடக்கம் செய்யும் Babaoshan Revolutionary Martyrs' Cemetery என்ற இடுகாட்டிலேயே அவரையும் அடக்கம் செய்ததுடன், அவருக்கு அங்கு நினைவுத் தூபி ஒன்றும் எழுப்பியுள்ளது.

---

நான் முதலாளித்துவத்தைக் கண்டிக்க நேர்ந்ததிற்குக் காரணம், தனிப்பட்டமுறையில் எந்தவொரு ஒடுக்குமுறைக்கும் நான் உள்ளாக்கப்பட்டு வந்ததினாலல்ல. மாறாக, முதலாளித்துவம் தனது சொந்த நோக்கங்களுக்காக எனக்குக் கற்றுத்தந்த தெய்வீகமான செயற்திறனைக் கடந்து வந்ததினாலேயே.

**– அன்னா லூயிஸ் ஸ்ரோங்**

# மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும்
# ஒரு புரட்(டு)சி 'மார்க்சியவாதி'!




**இ**லங்கையில் ஒரு காலத்தில் 100 சதவீதம் புரட்சிகர மார்க்சியவாதியாக வலம் வந்தவர் நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணரத்ன. ஆனால் புரட்சியிலும் நாடாளுமன்ற அரசியலிலும் ஏற்பட்ட மோசமான தோல்விகளால் துவண்டு விரக்தியடைந்து போனதாலோ என்னவோ, அவரது முன்னோடி ரொட்ஸ்கிசத் தலைவர்களான பிலிப் குணவர்த்தன, கலாநிதி எம்.எம்.பெரேரா, எட்மன் சமரக்கொடி, பாலா தம்பு போன்ரோரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தானும் அடிசறுக்கத் தொடங்கியுள்ளார்.

அவரின் தடம் புரளலின் கடைசி உதாரணமாக அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் அவர் ஆற்றிய உரை அமைந்திருக்கிறது. அந்தக் கருத்தரங்கில் பேசிய அவர், சோசலிஸ்ட்டுகள் இலங்கையில் அந்நிய நாடுகள் முதலீடு செய்வதை எதிர்க்காது வரவேற்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்! அதற்கு அவர் சொல்லும் காரணம், இலங்கையில் உள்ள இயற்கை வளங்களை பயன்படுத்தக் கூடிய தொழில்நுட்பத் திறன் இலங்கையர்களிடம் இல்லாதிருப்பதால், அந்நியர் மூலம் அதைச் செய்ய வேண்டும் என்பதாகும்.

அவரது பேச்சில் அநியாயமான விடயமென்னவெனில், தனது தடம் புரளலுக்கு ஆதரவாக மாபெரும் சோவியத் சோசலிசப் புரட்சியின் தந்தை லெனினை வம்புக்கு இழுத்திருப்பதுதான். அதுவும் உலகம் முழுவதுமுள்ள மக்கள் சோவியத் ஒக்ரோபர் புரட்சியின் 100ஆவது ஆண்டு நிறைவையிட்டு அதன் மேன்மையையும், படிப்பினைகளையும் கொண்டாடி வரும் வேளையில், சோவியத் யூனியனில் தவிர்க்க முடியாத சில நிர்ப்பந்தங்களால் ஒரு சிறிது காலம் பின்பற்றிய ஒரு கொள்கையை இலங்கையின் தற்போதைய மேற்கத்தைய சார்பு வலதுசாரி அரசாங்கத்தைப் பாதுகாக்க அவர் பயன்படுத்தியிருப்பதுதான்.

சோவியத் புரட்சி 1917இல் வெற்றி பெற்ற பின்னர் லெனின் தலைமையிலான அரசாங்கம் ஒரு குறுகிய காலம் பின்பற்றிய 'புதிய பொருளாதாரக் கொள்கை'யையே (New Economic Policy) விக்கிரமபாகு தனது முதலாளித்துவ விசுவாசத்துக்கு துணைக்கிழுத்திருக்கிறார். அவர் அது பற்றிச் சொன்ன விடயம் சரியா தவறா என்பதைப் பார்ப்பதற்கு முன்னர் அவர் இலங்கையர்களின் தொழில்நுட்பத் திறமையீனம் பற்றிச் சொன்னதை முதலில் பார்த்து விடுவோம்.

**சிவம் துர்க்காராம்**

இலங்கையர்களிடம் வளர்ச்சி அடைந்த மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகளில் உள்ளதைப் போலவோ அல்லது இன்றைய சோசலிச சீனா மற்றும் அன்றைய சோவியத் யூனியன் போன்ற சோசலிச நாடுகளில் உள்ளது போன்ற அதியுச்ச தொழில்நுட்ப வளர்ச்சியோ இல்லை என்பது உண்மைதான். ஆனால் அதை நிவர்த்தி செய்வதற்கான வழி என்ன என்பதுதான் கேள்வி. அதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

ஒன்று, அந்நிய முதலீட்டாளர்களுக்கு எமது இயற்கை வளங்களையும், எமது மக்களின் மலிவான உழைப்பையும் தங்குதடையின்றித் திறந்துவிட்டு, அவர்கள் எமது நாட்டைக் கொள்ளை அடித்துச் செல்ல அனுமதிப்பது.

மற்றது, எமது நாட்டைச் சமதையாக மதிக்கும் சோசலிச நாடுகள் மற்றும் நடுநிலைமை நாடுகளின் உதவியைப் பெற்று நாமே தொழில்நுட்பத் திறமையில் தேர்ச்சி பெற்று, சொந்தக் காலில் நின்று எமது நாட்டை நவீன பொருளாதாரம் கொண்ட நாடாக எதிர்காலத்தில் கட்டியெழுப்புவது.

இந்த இரண்டில் ‘தோழர்’ விக்கிரமபாகு முதலாவது, அதாவது முதலாளித்துவ அணுகுமுறையையே இலங்கைக்குச் சிபார்சு செய்கிறார். அதன் மூலம் அவர் சோசலிசப் பாதையிலிருந்து முதலாளித்துவப் பாதைக்கு அடிசறுக்கி விட்டதை தன்னையறியாமலேயே அம்பலப்படுத்தி விடுகின்றார்.

அடுத்ததாக அவர் தனது முதலாளித்துவ சார்பான கருத்துக்கு ஆதரவாக எமது மாபெரும் ஆசான் லெனின் அவர்களை வம்புக்கு இழுத்துள்ளதைப் பார்ப்போம்.

சோவியத் யூனியனில் 1917 ஒக்ரோபர் புரட்சிக்குப் பின்னர் முதலாளித்துவ அடிப்படையிலான ‘புதிய பொருளாதாரக் கொள்கை’யை ஒரு குறிப்பிட்ட காலம் (1921 – 28) வரை அமுல்படுத்தியது உண்மையே. அதற்கான காரணிகள் என்ன என்பதைப் பார்ப்பது அவசியம்.

1917 புரட்சியின் மூலம் லெனின் தலைமையிலான போல்ஸ்விக்குகள் அதிகாரத்தைக் கைப்பற்றிய நேரத்தில் ஆட்சியிலிருந்த எதேச்சாதிகார மன்னனான ஜார் ரஸ்யாவை முதலாம் உலகப் போரில் ஈடுபடுத்தி பொருளாதாரம் உட்பட நாட்டை அனைத்துத் துறைகளிலும் சீரழித்து வைத்திருந்தான். அதைச் சீரமைப்பது கம்யூனிஸ்ட்டுகளுக்கு இலேசான வேலையாக இருக்கவில்லை. இந்த நிலைமையில் அதிகாரத்தை இழந்த பிற்போக்கு சுரண்டும் வர்க்க சக்திகள் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக நாடு முழுவதும் எதிர்ப் - புரட்சி நடவடிக்கையில் இறங்கினர். அதன் காரணமாக புதிய சோவியத் சோசலிச அரசாங்கம் அவர்களுடன் நான்கு வருடங்கள் உள்நாட்டுப் போரில் ஈடுபட வேண்டி வந்தது. அதன் பின்னர் உலகின் முதலாவது தொழிலாளர் அரசை அழிக்கும் நோக்கில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி உட்பட பத்துக்கும் அதிகமான மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் சோவியத் யூனியன் மீது ஏககாலத்தில் போர் தொடுத்தன. இத்தகைய உள்நாட்டுப் போரையும், வெளிநாட்டு ஆக்கிரமிப்பையும் சமாளித்துக் கொண்டு, அதே நேரத்தில் கறாரான ஒரு சோசலிச அமைப்பைக் கட்டுவது சாத்தியமாக இருக்கவில்லை. அப்படி செய்யப் புறப்பட்டிருந்தால் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டி வரும். எனவே முதலில் நடைமுறையில் ஏற்கெனவே இருந்த முதலாளித்துவ அடிப்படையில் தன்னும் பொருளாதாரத்தை நிலைநிறுத்திக் கொண்டு, பின்னர் ஓரளவு ஸ்திரத்தன்மை வந்தபின்னர் சோசலிச பொருளாதாரக் கட்டுமானத்துக்குச் செல்ல வேண்டிய தேவையை உணர்ந்த லெனின், ஸ்டாலின் போன்ற தலைவர்கள் ஒரு இடைக் காலகட்டத்துக்கு முதலாளித்துவ அடிப்படையிலான புதிய பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தத் தீர்மானித்தனர்.

அதுவும் பாரிய கைத்தொழில்கள், போக்குவரதது, வங்கிகள், வெளிநாட்டு வர்த்தகம் என்பனவற்றை அரசின் கைகளில் வைத்துக் கொண்டு, மக்களை சிறு நிலத்துண்டுகளில் தனிப்பட்ட விவசாயத்தில் ஈடுபடவும், சிறு கைத்தொழில்களில் ஈடுபடவும், சிறிய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடவும் தான் அனுமதித்தனர். இதனால் பொருளாதார நெருக்கடி ஓரளவு தீர்ந்தது. அதன் பின்னர் தற்காலிகமாக நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கை கைவிடப்பட்டு முற்றுமுழுதாக சோசலிச அமைப்பு முறை கட்டியமைக்கப்பட்டது. விவசாய நிலங்கள் அனைத்தும் கூட்டுறவுப் பண்ணைகளாக மாற்றியமைக்கப்பட்டன. சகல தொழிற்சாலைகளும், வர்த்தக நடவடிக்கைகளும் தேசிய மயமாக்கப்பட்டன. அதன் மூலம் 1924இல் லெனின் மறைவுக்குப் பின்னர் தோழர் ஸ்டாலின் தலைமையில் சோவியத் யூனியனில் மிக உயர்ந்த கட்ட சோசலிச அமைப்பு முறை ஸ்தாபிக்கப்பட்டதுடன், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு நிகரான பலம் வாய்ந்த வல்லரசு நாடாகவும் சோவியத் யூனியன் மாற்றியமைக்கப்பட்டது. எனவே சில வரலாற்றுச் சூழல்களின் நிமித்தம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ‘புதிய பொருளாதாரக் கொள்கை’யை நடைமுறைப்படுத்தியதில் எந்தத் தவறும் இல்லை.

ஆனால் இங்கே முக்கியமான ஒரு விடயமென்னவெனில், சோவியத் யூனியனில் பதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்திலும் சரி, அதன் பின்னரும் சரி, அரசியல் அதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையான கம்யூனிஸ்ட் கட்சியிடம் இருந்தது. அதனால் அங்கு புதிய பொருளாதாரக் கொள்கையால் முதலாளித்துவ மீட்சியைக் கொண்டுவர சுரண்டும் வர்க்கங்களால் முடியவில்லை.

அது பின்னர் கட்சிக்குள்ளும் அரசுக்குள்ளும் மறைந்திருந்த துரேகி குருசேவ் தலைமையிலான முதலாளித்துவக் கும்பலால் தோழர் ஸ்டாலின் மறைவுக்குப் பின்னர் படிப்படியான முதலாளித்துவ மீட்சியின் மூலமே கபடத்தனமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அன்றைய லெனின் தலைமையிலான சோசலிச சோவியத் யூனியனுக்கும், இன்றைய இலங்கையின் மைத்திரி – ரணில் தலைமையிலான ஏகாதிபத்திய சார்பு வலதுசாரி அரசுக்கும் உள்ள வேறுபாட்டை மறைத்து விக்கிரமபாகு இப்படி முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடுவது வேண்டுமென்றே செய்யும் அயோக்கியத்தனம். தற்போதைய விக்கிரமபாகுவிடம் இருந்து இதைத்தவிர வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது என்பதுதான் உண்மை. உண்மை என்னவெனில், அவர் தீவிர சோசலிசம் பேசிய காலத்திலேயே முதலாளித்துவக் கைக்கூலியாகச் செயல்பட ஆரம்பித்துவிட்டார். உதாரணத்துக்கு இங்கு சில சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

ஒரு காலகட்டத்தில் இலங்கையின் வேறு எந்த இடதுசாரித் தலைவரையும் விட விக்கிரமபாகுவே தமிழ் மக்களின் பிரச்சினையில் அதிக அக்கறையுடையவராக, அவர்களை ஆதரிப்பவராகக் காட்டிக் கொண்டார். ஆனால் உண்மை என்னவெனில், அவர் தமிழ் மக்களை ஆதரிக்கவில்லை, பாசிசப் புலிகளையே ஆதரித்தார். அதனால்தான் அவரது கட்சியின் யாழ்மாவட்டச் செயலாளராகவும், நேர்மையான செயற்பாட்டாளராகவும் செயற்பட்ட தோழர் ஆ.க. அண்ணாமலையை புலிகள் அவரது மனைவிக்கும், ஒரேயொரு சிறுவயது மகளுக்கும் முன்னால் மிலேச்சத்தனமாகச் சுட்டுக் கொன்ற பின்னரும் கூட, விக்கிரமபாகுவும் அவரது நவ சமா சமாஜக் கட்சியும் தொடர்ந்தும் புலிகளை ஆதரித்துக் கொண்டிருந்தனர். இந்த

**தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...**

# சாதி ஆணவப் படுகொலையும் நீதிமன்றத் தீர்ப்பும்!

உடுமலை சங்கர் ஆணவப் படுகொலை வழக்கில் திருப்பூர் சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, வரலாற்றின் பக்கங்களில் நீடித்து நிலைத்து நிற்கும். ஆனால், இந்த தீர்ப்பு சமூக அடுக்குகளில் படிந்திருக்கும் சாதிய உணர்வுகளுக்கு சாவு மணி அடித்திருக்கிறதா என்றால் நமக்கு ஏமாற்றமே மிஞ்சுகிறது.

“கேவடா மானிடாவா எம்மில் கீழோர் மேலோர் இல்லை” என்று சாதிக்கு எதிராக புரட்சி கீதம் பாடிய பாரதியின் பிறந்த நாளுக்கு மறுநாள் (டிசம்பர் 12, 2017), இந்திய திருநாடே அதுவரை எதிர்பார்த்திராத ஒரு தீர்ப்பை, திருப்பூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி அலமேலு நடராஜன் வழங்கினார்.

உடுமலை சங்கரின் காதல் மனைவி கவுசல்யாவின் தந்தை சின்னசாமி உள்பட 6 பேருக்கு இரட்டை தூக்கு தண்டனையும், ஒருவருக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், மற்றொருவருக்கு 5 ஆண்டுகள் தண்டனையும் வழங்கினார் நீதிபதி. அதுவும், ஒரு பெண் நீதிபதியே இப்படி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியிருக்கிறார். எல்லாமே இயல்பாய் அமைந்தது.

இத்தனைக்கும் தீர்ப்பு நாளன்று, தமிழகத்தின் மிகப்பெரிய சினிமா நட்சத்திரத்தின் பிறந்த நாளும்கூட. அவருடைய பிறந்த நாள் கொண்டாட்டங்களைக்கூட எடுபடாமல் நீர்த்துப் போகச்செய்தது இந்த தீர்ப்பு.

முக்கிய அரசியல் கட்சிகள், அமைப்புகள் உள்பட பலதரப்பினரும் தீர்ப்பை வரவேற்றுள்ள நிலையில், ட்விட்டர் (Twitter), ஃபேஸ்புக் (Facebook) போன்ற சமூக வலைத்தளங்களிலும் தீர்ப்பு வழங்கிய நீதிபதியை பாராட்டியும் வாழ்த்துச் செய்திகள் குவிந்தன. ட்விட்டரில், ‘ஜஸ்டிஸ் ஃபார் கவுசல்யா’ (Justice For Kausalya) என்று ஹேஷ்டேக் (Hashtag) செய்யும் அளவுக்கு கவுசல்யாவின் சட்டப்போராட்டம் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியது.



**படுகொலைசெய்யப்பட்ட சங்கரும் உயிர்தப்பிய அவரது மனைவி கவுசல்யாவும் கோவிலொன்றில் திருமணம் செய்த கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.**

பட்டியல் வகுப்பைச் சேர்ந்த உடுமலை சங்கரும், தேவர் சமூகத்தைச் சேர்ந்த கவுசல்யாவும் ஒரே கல்லூரியில் பொறியியல் படிக்கும்போது காதல் கொண்டனர். இருவரும் பெற்றோர் எதிர்ப்பை மீறி 2015ம் ஆண்டு ஜுலை 11ம் தேதி திருமணம் செய்து கொண்டனர். அப்போதே கவுசல்யா தன் பெற்றோரிடம் இருந்து பாதுகாப்பு வேண்டும் எனக்கோரி, மடத்துக்குளம் காவல் நிலையத்தில் காதல் கணவருடன் தஞ்சம் அடைந்திருக்கிறார். இவர்களின் காதலுக்கு தொடக்கம் முதலே எதிர்ப்பு தெரிவித்து வந்த கவுசல்யாவின் பெற்றோர் கூலிப்படையை ஏவி, கடந்த ஆண்டு மார்ச் 13ம் தேதி சங்கரை பட்டப்பகலில் பலர் முன்னிலையில் வெட்டிப் படுகொலை செய்தனர். கவுசல்யாவையும் அந்த கும்பல் அரிவாளால் வெட்டியது. எனினும், தீவிர சிகிச்சை காரணமாக அவர் உயிர் பிழைத்தார். சிசிரிவி கமராவில் (CCTV camera) பதிவான இரத்தத்தை உறைய வைக்கும் இப்படுகொலைக் காட்சிகளை தொலைக்காட்சிகளிலும் யூரியுப்பிலும் (Youtube) பார்த்தவர்கள் கொலைஞர்களுக்கு சரியான நீதி வழங்கப்பட வேண்டுமென எதிர்பாரத்தனர்.

காவல்துறையினரும் இருதரப்பினரையும் அழைத்துப் பேசி சமாதானம் செய்திருக்கின்றனர். ஆனாலும், சாதி வெறியுடன் இருந்த கவுசல்யாவின் பெற்றோர், பலமுறை இளம் காதல் தம்பதியினரை தீர்த்துக்கட்ட முயற்சித்துள்ளது விசாரணையில் தெரியவந்திருக்கிறது. இப்படி எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்தே, மிகக்கடுமையான தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியிருக்கிறது. அதுவும், சாதிப்பெருமைகள் பேசப்படும் கொங்கு மண்டலத்தில் இருந்து.

சாதித்திமிரும், ஆதிக்க உளவியலும்தான் உடுமலை சங்கரை கொலை செய்யும் அளவுக்கு கொண்டு போய்விட்டிருக்கிறது. அதற்கு சமூக அழுத்தம்கூட காரணமாக இருக்கலாம். தீர்ப்பையொட்டி, எந்தளவுக்கு சாதிக்கு எதிராக, சாதி ஆணவப் படுகொலைக்கு எதிரான கருத்துகள் சமூக வலைத்தளங்களில் எழுந்தனவோ, அதற்கு நிகராகவே சாதி ஆதரவு

செய்திகளும் சமூகவலைத்தளங்களில் உலா வந்தன.

உண்மையில் சாதி – மதம் – கடவுள் – சாத்திரங்கள் ஆகியவை ஒரே நேர்க்கோட்டில் பயணிக்கின்றன. ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்தே இருக்கின்றன. கடவுள் வகுத்தவைதான் சாத்திரங்கள் என்ற கருத்து, சமுதாயத்தில் ஆழப்பதிந்துள்ளது. அந்த சிந்தனை வழிவழியாக ஒவ்வொரு தலைமுறைக்கும் கடத்தப்படுகிறது. அதனால்தான் உழைப்பின் அடிப்படையில் அல்லாமல் பிறப்பின் அடிப்படையில் சாதியும், வருணமும் தோன்றி இருக்கின்றன.

அப்படியெனில் சாதிகளை ஒழிக்கவே முடியாதா? என்றால் அதற்கும் அம்பேத்கர் அப்போதே பதில் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். தனது ‘சாதி ஒழிப்பு’ குறித்த நூலில், கலப்புத் திருமணங்களால்தான் சாதி ஒழிப்பை சாத்தியப்படுத்த முடியும் என்கிறார் அவர். ஒரு கட்டத்தில் காந்தியும் அதை வழிமொழிந்தார். பெரியாரும் அதையே பேசினார்.

என்னதான் பெரியார் மண், திராவிட பூமி என்று நாம் பெருமை பேசினாலும் தமிழகத்தில் சாதி மறுப்புத் திருமணங்களின் எண்ணிக்கை 2.5%க்கும் குறைவுதான்.

சாதி மறுப்புத் திருமணம் குறித்து கடந்த 2005ம் ஆண்டில் நாடு முழுக்க பெண்களிடம் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. 1981ல் 3.5% ஆக இருந்த சாதி மறுப்புத் திருமணங்கள், 2005ல் 6.1% உயர்ந்திருந்தது. அதாவது, ஆண்டுக்கு சராசரியாக 0.1% அதிகரித்திருக்கிறது. அவ்வளவுதான். அதே ஆண்டில் தமிழக நிலவரம் என்ன தெரியுமா? மொத்த திருமணங்களில் 2.2% விழுக்காடுதான் சாதி மறுப்பு திருமணங்கள் என்கிறது அந்த ஆய்வு.

**இதே வேகத்தின் அடிப்படையில் கணக்கிட்டால்கூட 50% அளவுக்கேனும் சாதி மறுப்புத் திருமணங்கள் நடக்க வேண்டுமெனில் இன்னும் 500 ஆண்டுகள் ஆகும் என்கிறார்கள் சமூகவியல் ஆய்வாளர்கள். ஆக, இன்னும் 1000 ஆண்டுகள் ஆனாலும் சமூக அடுக்குகளில் சாதி உணர்வு உயிர்ப்புடன் அப்பிக்கிடக்கும் என்பதுதான் கசப்பான உண்மை.**

எனில், சாதி வெறியை, சாதி உணர்வை அப்படியே குழி தோண்டி புதைத்து விட முடியாதா என்றால் ஒரே நாளில் முடியாது. சாத்தியமும் இல்லை. சுவரில் முட்டிக் கொள்வதற்குச் சமம். ஆனால், தீர்வு இல்லாமல் இல்லை.

பட்டியல் சாதி இளைஞனுக்கும், பிற இடைநிலைச்சாதியைச் சேர்ந்த பெண்ணுக்குமான காதல், கொலை என்று ஒருதலைப்பட்சமாக பார்க்கப்படுகிறது. இதுபோன்ற பிரச்னைகள், பட்டியல் சாதிகளுக்குள்ளேயேகூட உண்டு. பறையர், பள்ளர், அருந்ததியர் சமூகத்தினர் தங்களுக்குள் திருமண சம்பந்தம் வைத்துக் கொள்வதில்லை. இந்த சமூகத்தைச் சேர்ந்த பையனும், பெண்ணும் காதலித்தால் காவல்நிலையங்களில் கட்டப்பஞ்சாயத்து செய்து பிரிக்கப்படுவது இன்னும் தொடர்கிறது. அதெல்லாம் ஊடகங்களில் வெளியே வராததால் பிரச்னைகள் தெரிவதில்லை.

எனில், சாதி மட்டுமே இங்கு பிரச்னை இல்லை. பண்பாட்டு தளத்திலும், பொருளாதார தளத்திலும் மிகப்பெரிய மாற்றங்கள் வந்தால் ஒழிய சாதிகளை ஒழிக்க முடியாது. மக்களின் ஆழ்மனதில் இருந்து முதலில் சாதியை அகற்ற வேண்டும். அதற்கு பண்பாட்டுத் தளத்தில் மாற்றம் வேண்டும்.

கம்யூனிஸ்டுகள் ஆதிக்கம் நிறைந்த மேற்கு வங்கம், கேரளாவில்கூட சாதிகள் ஒழிக்கப்படவில்லையே. கலப்புத்திருமணச் சட்டம் இருந்தும் அரசாங்கங்கள் அதுபற்றி ஏன் முழுவீச்சில் விழிப்புணர்வு செய்வதில்லை? எனெனில், அரசாங்கமே சாதிகளை வளர்த்துக் கொண்டிருக்கிறது. ஹெச்ஐவி எய்ட்ஸ் (HIV AIDS) பற்றி எப்படி விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தார்களோ அதுபோல் கலப்புத்திருமணம் பற்றியும் அரசாங்கம் தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம் செய்ய வேண்டும்.

சாதிகள் இல்லாவிட்டால் நம்ம ஊர் அரசியல்வாதிகளுக்கும் அரசியல் செய்ய போக்கிடம் இல்லையே! எனில், சாதி வளர்த்தெடுத்தலின் ஊற்றுக்கண் யார்?

— அகராதிக்காரன்

(‘புதிய அகராதி’ என்ற இணையத்தில் வெளியான கட்டுரையின் சுருக்கமான வடிவம்)

# ‘தி இந்து’ (ஆங்கிலம்) நேர்காணலில் கவுசல்யா சங்கர் பகிர்ந்தவைகள்

கேள்வி: சாதி செல்வாக்கு சமூகத்தில் குறைந்து வருவதாகவும், அதனால் தவறான வன்முறைச் சம்பவங்களில் கவனம் செலுத்துவது தேவையற்றது என்ற கூற்றுக்கு நீங்கள் என்ன பதிலளிக்கிறீர்கள்?

பதில்: இது உண்மை இல்லை. சாதிய பாகுபாடுகளில் ஈடுபடுபவர்களே இவர்கள்தான். சில நேரங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாடுகள் மிகக் கொடூரமாக உள்ளதால் மக்கள் தைரியமாக கொலையில் ஈடுபடுகிறார்கள். இந்த சமூகத்தில் சாதிய பாகுப்படுகள் இன்னமும் இருக்கின்றன.

கேள்வி: சாதி தொடர்பான வன்முறையில் உங்கள் கணவனை இழந்து விட்டீர்கள், இந்த வழக்கில் உங்கள் பெற்றோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கை தொடரும்போது நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் என்ன?

பதில்: இந்த வழக்கைத் தொடர்ந்தது தொடர்பாக என்னை பலர் ஊக்கம் இழக்கச் செய்ய முயற்சி செய்தார்கள். எனது கணவனே உயிருடன் இல்லாத பட்சத்தில் எனது பெற்றோரை குற்றவாளி கூண்டில் நிறுத்துவதில் எந்த பயனும் இல்லை என்று கூறினார்கள். அவர்கள் எனது குணநலன்கள் குறித்து விமர்சிக்கவும் செய்தார்கள்.

மேலும், நான் மனித உரிமைச் செயற்பாட்டாளர் என்று கூறிக் கொண்டால், இந்த வழக்கை நான் தொடரக் கூடாது என்றும் கூறினார்கள். நான் என் வலியுடன் தனியாக இருந்தேன். அவர்களுக்கு அதனைப் பற்றி ஒன்றும் தெரியாது.


கேள்வி: நீங்கள் இந்த வழக்கைத் தொடர தீர்மானித்திருந்தாலும், இது உங்களுக்கு சோதனையான அனுபவமாக இருந்திருக்கும் அல்லவா, குறிப்பாக உங்களது பெற்றோருக்கு எதிராக?

பதில்: எனது கணவருக்கு நீதி தேவை. அதற்காக எந்த எல்லைக்கும் செல்ல நான் தயாராக இருந்தேன்.

கேள்வி: உங்களது பயணத்தின் மூலம் நீங்கள் பெற்ற பலம் என்ன? தனிப்பட்ட நபர் அல்லது புத்தகம் உங்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியதா?

பதில்: அந்த சம்பவத்துக்குப் பிறகு, நிறைய நபர்கள் தனிப்பட்ட முறையில் என்ன சந்தித்து எனக்கு அவர்களது ஆதரவை அளித்தனர். பல தொண்டு நிறுவனங்களிலிருந்து என்னைச் சந்தித்து இந்த வழக்கு தொடர்பாக எனக்கு உற்சாகமும், ஆதரவும் அளித்தனர்.

ஒருவரது பெயரைக் குறிப்பிடுவது சரியாக இருக்காது. புத்தகங்களையும் குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் நிறைய புத்தகங்கள் படித்து வருகிறேன். இவர்கள் அனைவரும் எனது எண்ணத்தை ஒட்டுமொத்தமாக வடிவமைத்து இருக்கிறார்கள்.



கேள்வி: சாதி தொடர்பான அட்டூழியங்களுக்கு எதிராக, குறிப்பாக கலப்பு சாதியில் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளை குறிவைக்கப்படுவது தொடர்பாக தனிச் சட்டம் வேண்டும் என்று பரிந்துரைக்கிறீர்கள். தனிச் சட்டம் ஏன் முக்கியம்? ஏற்கெனவே நிறைய வலுவான சட்டங்கள் இருக்கிறதே.....

பதில்: சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் அவை முறையாக நடைமுறைப் படுத்தப்படுவது இல்லை. கலப்புத் திருமணத்தால் பாதிப்புக்குள்ளாகுபவர்களுக்காக தனிச் சட்டத்தை இலக்காக வைத்தே நான் இருக்கிறேன். ஏனெனில் கடுமையான தண்டனைகள்தான் குற்றங்களைத் தடுத்து நிறுத்தும்.

தண்டனைகள் கடுமையாக இருந்தால்தான் கலப்பு சாதி திருமணங்களுக்கு எதிராக உள்ளவர்கள் குற்றம் புரிவதற்கு முன்பாக ஒருமுறைக்கு இரண்டு முறை யோசிப்பார்கள்.

கேள்வி: சங்கர் தனிப்பயிற்சி மையத்தை நீங்கள் தொடங்கக் காரணம் என்ன?

பதில்: இளம் மாணவர்களுக்கு கல்வி தொடர்பாக உதவுவதே இதன் மைய நோக்கம். அவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் எடுத்து அவர்களது கல்விக்கு உதவ உத்தேசித்துள்ளேன். அவர்கள் பொறுப்புணர்வுள்ள ஆண்கள், பெண்களாக வளருவார்கள் என்ற நம்புகிறேன்.

**பேட்டி கண்டவர்:டெனிஸ் எஸ் ஜேசுதாசன்**
**தமிழில்: இந்து குணசேகர்**

**நன்றி: தி இந்து**

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

மாதிரியான கடைகெட்ட துரோகத்துக்கு உதாரணம் காட்டுவது சிரமம்.

அதுமட்டுமின்றி, 2000 ஆண்டில் சந்திரிக தலைமையிலான அரசாங்கம் ஓரளவு சிறந்ததொரு தீர்வை இனப்பிரச்சினைக்கு முன்வைத்த போது, புலிகளும் ஐ.தே.கவும் அதை எதிர்த்து நடைமுறைப்படுத்த விடாமல் முறியடித்தனர். ஐ.தே.க. அந்தத் தீர்வு நகலை நாடாளுமன்றத்தில் தீயிட்டுக் கொளுத்தியது. புலிகளின் ஆணைப்படி செயற்பட்ட அன்றைய பிரதான தமிழ் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியும் அந்தத் தீர்வை எதிர்த்தது. இவர்களுடன் ஹெல உறுமயவும், ஜே.வி.பியும் கூட சேர்ந்து நின்று எதிர்ப்புத் தெரிவித்தன. இவர்கள் எல்லோரும் சேர்ந்து சந்திரிகவின் தீர்வுத் திட்டத்துக்கு எதிராக கொழும்பு மாநகரசபை மைதானத்தில் எதிர்ப்புக் கூட்டம் ஒன்றை நடாத்தினார்கள். அந்த எதிர்ப்புக் கூட்டத்தில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத விக்கிரமபாகுவும் கலந்து கொண்டு தீர்வுத் திட்டத்துக்கு எதிராகப் பேசினார். தன்னைச் சோசலிசவாதி என்று சொல்லிக் கொண்டு முதலாளித்துவ – பேரினவாத சக்திகளுடன் சேர்ந்து நின்று சிறுபான்மை இனமொன்றுக்கு உரிமை வழங்குவதை எதிர்த்த விக்கிரமபாகுவின் இந்தக் கடைகெட்ட துரோகச் செயலை என்ன சொல்லியும் நியாயப்படுத்திவிட முடியாது.

அதுமட்டுமின்றி, கடந்த மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அவர் ஐ.தே.கவின் ஊதுகுழலாகவே மாறிவிட்டார். அவர் தனது கட்சிக் காரியாலயத்தை விட ஐ.தே.க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் காரியாலயத்திலேயே தனது பெரும் பொழுதைக் கழித்ததுடன், ஐ.தே.க. மகிந்த அரசுக்கு எதிராக நடாத்திய ஊடகவியலாளர் மாநாடுகளில் தன்னையும் இணைத்துக் கொண்டார். தற்போது ரணில் தலைமையிலான இன்றைய அரசு ஆட்சிக்கு வந்தவுடன், அவர்களுடன் கூடிக்குலாவித் திரிவதுடன், நாட்டில் திரும்பவும் திறந்த பொருளாதாரக் கொள்கையே நடைமுறைப்படுத்தப்படும் என்று அடிக்கடி பேசி வரும் ரணிலுக்கு ஆதரவாக லெனின் தலைமையிலான சோசலிச சோவியத் அரசு வேறொரு சூழ்நிலையில், வேறொரு தேவைக்காக நடைமுறைப்படுத்திய புதிய பொருளாதாரக் கொள்கையை இன்றைய இலங்கை அரசின் கேடுகெட்ட முதலாளித்துவக் கொள்கையுடன் சமப்படுத்தி சோசலிச அமைப்பையே இழிவு செய்யும் நிலைக்கு மாறியுள்ளார்.

விக்கிரமபாகு கருணரத்னவைப் பொறுத்தவரை இன்னும் பாக்கியாக இருப்பது ஒரேயொரு விடயம்தான். அது என்னவெனில், அவரது பெயரளவிலான நவ சமசமாஜக் கட்சியைக் கலைத்துவிட்டு, ஐ.தே.கவுடன் இரண்டறக் கலந்து விடுவதுதான். அப்படிச் செய்வதின் மூலம் அவர் உள்ளூர நேசிக்கும் முதலாளித்துவக் கொள்கைக்குச் சேவகம் செய்வதுடன், சில வேளைகளில் அவரது நீண்டகால நிறைவேறாத ஆசையான நாடாளுமன்றப் பதவி ஒன்றையும் அடைய முடியும்.

# தமிழரசுக் கட்சியை மட்டுமல்ல, பிற்போக்குத் தமிழ் தேசியவாதத்தையும் ஒழித்துக் கட்ட வேண்டும்!

இலங்கை தமிழரசுக் கட்சிக்கு வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு எதிர்ப்பு உருவாகியுள்ளதைக் காண முடிகிறது. ஆனால் இந்த எதிர்ப்பு சாதாரண தமிழ்ப் பொதுமக்கள் மத்தியில் பரவலாக உருவாகவில்லை என்பதும், தமிழ்த் தேசியவாத சக்திகளிடமே அதிகமாகக் காணப்படுகிறது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம்.

தற்போதைய எதிர்ப்பு நிலைமை வேகம் பெற்றதற்கு அண்மையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தலும் ஒரு காரணம். இருந்தாலும் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை இதற்கு முன்னரும் பல ஏற்ற இறக்கங்களை அக்கட்சி கண்டுள்ளது.

1949இல் உருவான தமிழரசுக் கட்சி அதன் முன்னோடிக் கட்சியான தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு கட்சியாகும். அதன் காரணமாக அவ்விரு கட்சிகளும் 1952, 1960 (இரு தேர்தல்கள்), 1965, 1970 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் எதிரும் புதிருமாகவே போட்டியிட்டு வந்துள்ளன.

இந்த இரு கட்சிகளும் கடுமையான எதிரிகள் போலச் செயற்பட்டாலும் சாராம்சத்தில் ஒரே வர்க்கங்களை, அதாவது தமிழ் மேட்டுக் குழாமின், அதிலும் குறிப்பாக யாழ். உயர்சாதிப் பிரிவினரைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளாகவே இருந்து வந்துள்ளன. தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து வந்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கிய எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க அக்கட்சியை ஐ.தே.கவிலிருந்து மாறுபட்ட, ஏகாதிபத்திய – எதிர்ப்பு தேசியவாதிகளின் கட்சியாக உருவாக்கினார். அதன் மூலம் இலங்கை முதலாளித்துவ வர்க்கத்தில் விதேசிய சார்பு, தேசிய சார்பு என இரு அணிகள் இருப்பதை வெளிப்படுத்தினார்.

தமிழரசுக் கட்சி உருவான போதும் அப்படி ஒரு நிலைமை இருக்கும் என்ற எதிர்பார்ப்பு சிலரிடம், குறிப்பாக கம்யூனிஸ்ட்டுகளிடம் இருந்தது. அதன் காரணமாக தமிழரசுக் கட்சி உருவான ஆரம்ப காலங்களில் தமிழரசுக் கட்சியைச் செயற்பட விடாது




படுபிற்போக்கான தமிழ் காங்கிரஸ் கட்சி அடாவடித்தனங்களில் ஈடுபட்ட போது, தமிழரசுக் கட்சி தனது பொதுக் கூட்டங்களை நடாத்துவதற்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சில இடங்களில் தனது புரட்சிகர அணிகள் மூலம் மேடைப் பாதுகாப்பு கூட வழங்கியது.

***சுப்பராயன்***

அதற்கான காரணம் தமிழரசுக் கட்சி பண்டாரநாயக்கவின் சுதந்திரக் கட்சி போல ஒரு தமிழ் தேசிய முதலாளித்துவக் கட்சியாக, முற்போக்கான கட்சியாக இருக்கும் என்றும், அதன் காரணமாக தெற்கில் பண்டாரநாயக்கவின் கட்சியுடன் சில விடயங்களில் சேர்ந்து செயற்படுவது போல தமிழ் பகுதிகளில் தமிழரசுக் கட்சியுடன் கம்யூனிஸ்ட் கட்சி நேச அணியாகச் சேர்ந்த செயற்படலாம் எனக் கருதியதால் தான்.

ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்பார்த்ததிற்கு மாறாக தமிழரசுக் கட்சி இன்னொரு தமிழ் காங்கிரஸ் கட்சியாகத்தான் செயற்பட்டது. அதற்கான காரணங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

தென்னிலங்கை போன்று வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்த பகுதிகளில் தமிழ் தேசிய முதலாளி வர்க்கம் ஒன்று உருவாகி இருக்கவில்லை.

தமிழரசுக் கட்சியை உருவாக்கியவர்கள் தமிழ் காங்கிரசிலிருந்து வர்க்க அடிப்படையிலான கொள்கை வேறுபாடுகளுடன் பிரிந்து வரவில்லை.

தமிழ் சமூகத்தில் உயர்சாதி பிரிவினரே அதிகம் என்பதால் தேர்தல்களில் அவர்களது வாக்குகளைக் கவருவதற்காக அவர்களைச் சார்ந்து நின்ற சந்தர்ப்பவாதப் போக்கு.

தமிழரசுக் கட்சித் தலைமையை அந்நிய ஏகாதிபத்திய விசுவாசமும், சிங்கள மேட்டுக்குடிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஐ.தே.கவுடனான

---

பூர்வீக சமூகங்களைப் பற்றி முதலாளி வர்க்க வரலாற்றாசிரியர்கள் எழுதிய வரலாறுகளைப் படிக்கின்ற பொழுது ஒருவர் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அவர்கள் எதற்கும் தயங்குவதில்லை. ஒரேயடியாகத் திரித்துக் கூறுவதற்கும் கூடத் துணிந்தவர்கள். உதாரணமாக, இந்தியாவின் கம்யூன்களை பலாத்காரமாக அழிக்கின்ற பிரிட்டிஸ் கொள்கையை ஆர்வத்துடன் தீவிரமாக ஆதரிக்கின்ற சேர்.ஹென்றி மெயின் இக்கம்யூன்களுக்கு உதவி செய்வதற்கு பிரிட்டிஸ் அரசாங்கம் செய்த எல்லா மேன்மையான முயற்சிகளும் பொருளாதார விதிகளின் பேராற்றல்மிக்க சக்தியினால் குலைக்கப்பட்டன என போலித்தனமாக எழுதுகிறார்.

**- கார்ல்மாக்ஸ்**

உறவையும் விரும்பிய கனவான்கள் ஆக்கிரமித்திருந்தவை.

இந்தக் காரணிகளால் தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரஸ் சென்ற வலதுசாரிப் பாதையிலேயே சென்றது. இருப்பினும் தமிழரசுக் கட்சி ஆரம்ப காலங்களில் கிளப்பிய தமிழ் மொழி உணர்வும், தமிழ் பேசும் மக்களுக்கான கோசங்களும் சிறுபான்மை தேசிய இனங்களான வடக்கு கிழக்குத் தமிழர்களை மட்டுமின்றி, வடக்கு கிழக்கில் வாழ்ந்த இஸ்லாமியத் தமிழர்களையும், மலையக இந்திய வம்சாவழித் தமிழர்களையும் கூடக் கவர்ந்திழுத்தது. அதற்கு இன்னொரு காரணம் அந்தக் காலகட்டத்தில் வடக்கு கிழக்கு இஸ்லாமிய மக்களுக்கோ, மலையகத் தமிழ் மக்களுக்கோ அவர்கள் மத்தியில் இருந்து அரசியல் தலைமைகள் உருவாகியிருக்கவும் இல்லை.

இதன் காரணமாக, தமிழரசுக் கட்சியின் தலைவரான எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தை 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் தலைவர் என, அதாவது வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் வாழும் தமிழ் மக்களினதும், வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களினதும் தலைவர் என, தமிழரசுக் கட்சியினர் பெருமையுடன் அழைக்க ஆரம்பித்தனர்.

ஆனால் தமிழரசுக் கட்சி அந்த அடிப்படையில் செயற்படாது, யாழ்.மையவாத அடிப்படையில் செயற்பட்டதால், காலப்போக்கில் முஸ்லிம் மக்களும், மலையகத் தமிழ் மக்களும் தமிழரசுக் கட்சியின் தலைமையை நிராகரித்ததுடன், தமது சொந்த அரசியல் கட்சிகளான சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசையும், இலங்கை தொழிலாளர் காங்கிரசையும் உருவாக்கிச் செயற்பட ஆரம்பித்தனர்.

முதலாளித்துவ சமூகத்தில் ஒவ்வொரு தேசிய இனங்களிலுமுள்ள முதலாளித்துவ தேசியவாத சக்திகள் தமக்கான தனி அரசியல் பிரதிநிதித்துவத்தை உருவாக்கிச் செயற்படுவது எல்லா நாடுகளிலும் நிகழ்ந்து வந்திருக்கிறது என்ற போதிலும், தமிழரசுக் கட்சி போன்ற பெரிய சிறுபான்மை தேசிய இனத்தின் கட்சி எல்லாச் சிறுபான்மைத் தேசிய இனங்கள் மத்தியிலும் வேற்றுமைகள் மத்தியிலும் ஒற்றுமையை உருவாக்கிச் செயற்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் தமிழரசுக் கட்சி அவ்வாறு செய்யவில்லை. தமது தலைமையை நிராகரித்த சிறிய இனங்களான முஸ்லிம்களை ''தொப்பி பிரட்டிகள்'', ''முக்கால்கள்'', ''சோனிகள்'' எனத் துவேசித்ததுடன், மலையகத் தமிழர்களை ''தோட்டக்காட்டான்'', ''வடக்கத்தையான்'' ''வயிற்றுக் குத்தை நம்பினாலும் வடக்கத்தையானை நம்பக்கூடாது'' என்றும் துவேசித்தனர்.

இந்தவாறான துவேசத்தை தமிழரசுக் கட்சி துவக்கி வைத்ததின் விளைவே பின்னர் அவர்களால் உருவாக்கப்பட்ட பாசிசப் புலிகள் வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களை இனச் சுத்திகரிப்பு செய்ய வழிவகுத்தது.

அதுமட்டுமின்றி, கிழக்கில் தமிழரசுக் கட்சியின் தூணாகச் செயற்பட்ட செ.இராசதுரை கட்சியுடன் அதிருப்தி கொண்டு வெளியேறிச் சென்ற போது கிழக்குத் தமிழர்களுக்கெதிராகவும் தமிழரசுத் தலைமை பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டது. இது தமிழரசுக் கட்சியின் வாரிசாக உருவான புலிகளிடமும் பின்னர் வெளிப்பட்டது. அவர்கள் தமது இடைக்கால நிர்வாகசபைத் திட்டத்தை வெளியிட்ட போது அதன் நிர்வாகிகளாகப் பரிந்துரைக்கப்பட்டவர்களின் பட்டியலில் கிழக்கு மாகாணத்தவர் ஒருவர் கூட இடம் பெறாதது தமிழரசுக் கட்சி தொடக்கி வைத்த போக்கின் விளைவே.

யாழ்.மையவாதத் தலைமைகளை தமிழரசுக் கட்சியும், புலிகளும் கொண்டிருந்தமையாலேயே இராசதுரை தமிழரசுக் கட்சியிலிருந்து விலகியதற்கும், பின்னர் புலிகள் இயக்கத்திலிருந்து அதன் கிழக்கு தலைவர்களான கருணா, பிள்ளையான் போன்றோர் விலகியதற்கும் வழி வகுத்தது.

இருந்தும் தமிழரசுக் கட்சி தனக்கு நெருக்கடிகள் உருவாகும் காலங்களில் ஏதாவது ஒரு தந்திரோபாயத்தை மேற்கொண்டு தமிழ் மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை நிலை நிறுத்தியே வந்துள்ளது.

உதாரணமாக, 1970 பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி பெரும் வீழ்ச்சியை சந்தித்தது. அதன் தலைவர்களான அ.அமிர்தலிங்கம், டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன், மு.ஆலாலசுந்தரம் ஆகியோர் தேர்தலில் படுதோல்வி அடைந்தனர். அதேபோல தமிழ் காங்கிரஸ் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலமும், அக்கட்சியின் செயலாளரான மு.சிவசிதம்பரமும் கூட தேர்தலில் படுதோல்வி அடைந்தனர். அதற்குக் காரணம் அந்த இரு கட்சிகளும் தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளுக்கு எதிராக இலங்கையின் தரகு முதலாளித்துவக் கட்சியான ஐ.தே.க.வின் அரசாங்கத்தில் இணைந்திருந்ததும் (1965 – 70), வடக்கில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடாத்திய சமூக விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகச் செயற்பட்டதுமாகும்.


இந்தத் தேர்தல் தோல்விகளின் பின்னர்தான் தமிழ் தரகு முதலாளித்துவ வர்க்கங்களின் இரு பிரிவுகளான தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் தமது கையறு நிலையை உணர்ந்தனர். அந்த நிலையைத் தவிர்ப்பதற்காக வரலாற்றில் முதல் தடவையாக அவை தமது தனிப்பட்ட குரோதங்களை மறந்து ஒற்றுமைப்பட்டதுடன், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற புதிய அமைப்பை உருவாக்கியதுடன், தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக தனித் தமிழ் ஈழம் என்ற கோசத்தையும் முன் வைத்தனர் அதன் மூலம் தம்மை அழிவிலிருந்து பாதுகாத்துக் கொண்டனர். அவர்கள் தமது தந்திரோபாயத்தை மாற்றினார்களே தவிர, தமது இனவாத, பிற்போக்கு கொள்கைகளில் எந்த மாற்றமும் ஏற்படுத்தவில்லை.


பின்னர் அவர்களது நடைமுறைகள் வங்குரோத்தாகி, அதன் காரணமாக தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராடட்ட அமைப்புகள் உருவாகி, அவற்றிலும் புலிகள் இயக்கம் தனிப்பெரும் பாசிச இயக்கமாகி தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் சிலரை ஒழித்துக் கட்டிய போது, தமிழரசுக் கட்சி பின்னடைவைச் சந்தித்தாயினும், புதிய தந்திரோபாயத்தைக் கைக்கொண்டு புலிகளின் அனுசரணையுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் புதிய அமைப்பொன்றை உருவாக்கித் தன்மைப் பாதுகாத்துக் கொண்டனர். ஆனால் புலிகள், சோரம் போன சில தமிழ் ஆயுதப் போராட்டக் குழுக்களையும் அதில் இணைத்திருந்ததால், தமிழரசுக் கட்சி தனது தனி ஆதிக்கத்தை அப்பொழுது காட்டுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

ஆனால் புலிகளின் அழிவின் பின்னர் தமிழரசுக் கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற அமைப்பைத் தவிர்க்க முடியாதபடி தொடர்ந்ததுடன், தனது தனி ஆதிக்கத்தையும் படிப்படியாக வெளிப்படுத்த ஆரம்பித்தது. அதன் விளைவே தற்பொழுது சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேறிச் சென்ற நிலைமையும், கூட்டமைப்பின் எஞ்சியுள்ள பங்காளிக் கட்சிகளான புளொட், ரெலோ

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...**

# அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை!




வடகொரியாவை அழித்துவிடு வோம் என்றும் வடகொரியாவுடன் யாரும் ராஜீய உறவு வைத்துக் கொள்ளக்கூடாது என்றும் மிரட்டுவதைக் கைவிட்டுவிட்டு அமெரிக்கா சற்று அடக்கி வாசிக்க வேண்டும் என சீனா எச்சரித்துள்ளது. வடகொரியா, கடந்த புதனன்று கண்டம்விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் வல்லமை படைத்த 'குவாசாங் 15' (hwasong 15) என்ற வெகுரக ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்தது. இலக்கு தூரமான 600 மைல் தொலைவை, வானில் 2800 மைல்கள் உயரத்தில் பாய்ந்து சென்று மிகச்சரியான முறையில் எட்டியது. வெறும் 53 நிமிடத்தில் இந்த சோதனை நடந்து முடிந்தது. வடகொரிய தலைநகர் பியாங்யாங்கிலிருந்து 8 ஆயிரம் மைல்கள் (13ஆயிரம் கிலோமீட்டர்) தூரம் வரையில் உள்ள இலக்கினை இந்த ஏவுகணையால் தாக்க முடியும். பியாங்யாங்கிலிருந்து அமெரிக்காவின் மையப்பகுதியான நியூயார்க் நகரம் 6,672 மைல்கள் (10ஆயிரம் கிலோமீட்டர்) தொலைவில் அமைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பின்னணியில் அமெரிக்காவை மிக எளிதாக வடகொரியாவால் தாக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் டிரம்ப் நிர்வாகம் ஆத்திரத்தின் உச்சத்திற்கு சென்றுள்ளது. இந்நிலையில் புதனன்று ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அவசரக் கூட்டத்தில் பேசிய அமெரிக்க தூதர் நிக்கி ஹேலி, வடகொரியாவை அழித்துவிடுவோம் என்று அனைத்து விதமான ராஜீய வரைமுறைகளையும் மீறி பகிரங்க மிரட்டல் விடுத்தார். அதுமட்டுமல்ல, வட கொரியாவுடன் சீனா, இந்தியா உட்பட அனைத்து நாடுகளும் ராஜீய உறவுகளை துண்டித்துக் கொள்ள வேண்டு மென்றும், அந்நாட்டிற்கு எண்ணெய் சப்ளை செய்துவரும் சீனா உடனடியாக அதை நிறுத்த வேண்டு மென்றும் உலக நாடுகளுக்கு 'உத்தரவு' போட்டிருக்கிறார் நிக்கி ஹேலி. நிக்கியின் இந்தப் பேச்சை சீனா கடுமையான முறையில் விமர்சித்துள்ளது. இதுதொடர்பாக தலையங்கம் எழுதியுள்ள சீனாவின் ஆங்கில ஏடான குளோபல் டைம்ஸ் (Global Times), ''வடகொரியா தனது கனவுத் திட்டமான ஏவுகணை சோதனைகளை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிற நிலையில், அதை மிரட்டும் விதத்தில் அமெரிக்காவின் எதிர்வினை தொடர்கிறது. வடகொரியாவின் சோதனைகளை டிரம்ப் நிர்வாகம் அச்சுறுத்தலாக பார்க்கிறது. எனவே அந்த சோதனைகளை அந்நாடு ஏற்கத் தயாராக இல்லை. ஆனால் அதே நேரத்தில் பதிலடி தந்து வடகொரியாவை அழித்துவிடுவோம் என்று கூறி மிரட்டல் விடுவதன் மூலமாக வடகொரியாவை தடுத்து நிறுத்திவிட முடியும் என்று அமெரிக்கா நினைப்பது சாத்தியமானதல்ல'' என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும், ''வடகொரியாவுடன் ராஜீய உறவுகளை துண்டித்துக் கொள்ளுங்கள் என்றும் அந்நாட்டிற்கு எண்ணெய் சப்ளை செய்யக்கூடாது என்றும் பிற நாடுகளுக்கு அமெரிக்கா உத்தரவு போடுவது என்பது, வடகொரியாவை அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முற்றாக அழிக்கும் அமெரிக்காவின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே என்று தெரிகிறது'' எனவும் அத்தலையங்கம் விமர்சிக்கிறது. வடகொரியா வெற்றிகரமாக தனது சோதனைகளை நடத்தினாலும், இன்னும் அந்த ஏவுகணையில் அணு ஆயுதத்தைப் பொருத்தி சோதிப்பதற்கு நிச்சயம் சற்று காலம் ஆகும். இந்த இடைவெளியைப் பயன்படுத்தி வடகொரியாவை முற்றாக அழித்துவிட வேண்டுமென்று அந்நாட்டில் சிலர் கூக்குரல் எழுப்புகிறார்கள். இதுபோன்ற கூக்குரல்கள் ஒருபோதும் அரசின் கொள்கைகளாக மாறிவிட முடியாது. அது எளிதான காரியமும் அல்ல'' என்று குறிப்பிட்டுள்ள குளோபல் டைம்ஸ் தலையங்கம், சூழ்நிலைமையின் தீவிரத்தை புரிந்துகொண்டு வடகொரிய அரசு நிதானமாக நடந்துகொள்ள வேண்டும், இன்றைய சூழல் வடகொரியாவுக்கு கடும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய சூழல் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்று வட கொரிய அரசுக்கும் அறிவுரை கூறியிருக்கிறது. அதேநேரத்தில், "வடகொரியா மீது சில தடைகளை விதிக்க வேண்டும் என்று எழுந்த குரல்களையொட்டி ஏற்கெனவே ஐக்கியநாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றி தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலும் கூடுதலாக தன்னிச்சையான முறையில் வடகொரியாவுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்ற அமெரிக்காவின் விருப்பத்திற்கு சீனாவோ, ரஷ்யாவோ இசைந்து நடக்க முடியாது. அதேபோல வடகொரியாவுக்கு எண்ணெய் சப்ளையை நிறுத்த வேண்டும் என்றோ, அனைத்து நாடுகளும் வடகொரியாவுடன் ராஜீய உறவுகளை துண்டிக்க வேண்டும் என்றோ ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம் ஏதும் நிறைவேற்றவில்லை. அமெரிக்கா தனது ஆத்திரத்தை வெளிப்படுத்துவது

வழக்கமானதே என்ற போதிலும் அதன் விருப்பங்கள் அனைத்தும் ஐநா சபையின் தீர்மானங்களாக மாறிவிட முடியாது. மாறாக, வடகொரியா தனது அணுசக்தி மற்றும் ஏவுகணை திறன்களை அதிகரித்துள்ள சூழலில் அந்நாட்டை எப்படிக் கையாள்வது என்பது குறித்தும், பிரச்சனைக்கு எப்படி தீர்வு காண்பது என்பது குறித்தும் சர்வதேச சமூகம் விவாதிக்க வேண்டும்'' என்றும் தலையங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதுமட்டுமல்ல, ''வடகொரியாவுக்கு எண்ணெய் சப்ளை செய்வதில் ஏற்கெனவே ஐ.நா பாதுகாப்புக் கவுன்சிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலேயே சீனா செயல்படுகிறது. தற்போது கடும் குளிர்காலம் நிலவுகிறது. எனவே தன்னிச்சையாக எண்ணெய் சப்ளையை நிறுத்த முடியாது. அப்படி நிறுத்துவது என்பது வடகொரிய மக்களின் உயிரோடு விளையாடுவதாகும். எனவே வடகொரிய மக்களுக்கு எதிராக அப்படிப்பட்ட கடுமையான நிலைப்பாட்டை எடுக்க முடியாது. எண்ணெய் சப்ளையை நிறுத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் யோசனைக்கு சீனாவோ ரஷ்யாவோ எந்தவிதத்திலும் ஆதரவு தெரிவிக்க முடியாது'' என்றும் குளோபல் டைம்ஸ் தலையங்கம் கூறுகிறது. தலையங்கத்தின் இறுதியில் எழுதப்பட்டுள்ள வார்த்தைகள் அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடும் விதத்தில் அமைந்துள்ளன: ''சீனாவின் தேசிய நலன்களை பாதுகாப்பது என்பது, வடகொரியாவின் கொள்கைகளுக்கெல்லாம் ஆதரவாக இருப்பது என்பதல்ல. ஆனால் அதே நேரத்தில் அமெரிக்காவின் எந்தவொரு நிகழ்ச்சி நிரலுக்கும் இசைந்து சீனா ஒருபோதும் எதையும் விட்டுக் கொடுக்காது''

''அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள், வடகொரியாவுக்கு சீனா எண்ணெய் சப்ளையை நிறுத்த வேண்டும் என்று விரும்புகின்றன, நிர்ப்பந்திக்க முயல்கின்றன. இதன் மூலமாக சீனா – வடகொரியா இடையிலான உறவை குறைத்து மதிப்பிட அல்லது முறித்துவிட முயற்சிகளை மேற்கொள்கின்றன. ஆனால் அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப விளையாடப்படுகிற சதுரங்கக் காய் அல்ல சீனா'' என்று கடுமையான முறையில் தலையங்கம் எச்சரிக்கிறது. ''கொரிய தீபகற்பத்தில் போர்ச்சூழல் எழுவதைத் தடுக்க சீனா தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆனால் முரண்பாட்டை முடிவுக்கு கொண்டுவரும் விதத்தில் இருநாடுகளின் செயல்பாடுகளும் அமையவில்லை. இந்தச்சூழலில் கொரிய தீபகற்பத்தில் நிலைமை மோசமாக மாறிக் கொண்டிருக்கிறது. ஆனால் என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும் என்று சீனா அமைதியாக அமர்ந்துகொண்டு இருக்காது'' என்றும் குளோபல் டைம்ஸ் தலையங்கம் எச்சரித்துள்ளது.
(நன்றி: தீக்கதிர்)

**இதேவேளை மொஸ்கோவில் ஊடகவியலாளர்களிடம் பேசிய ரஸ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், அமெரிக்காவின் வேண்டுகோளை முழுவதுமாக நிராகரித்துள்ளார். வட கொரியாவுடன் ரஸ்யாவின் உறவு தொடரும் எனக் குறிப்பிட்ட அவர், அமெரிக்கா தான் வட கொரியா மீது அநாவசியமான பொருளாதாரத் தடைகளை விதித்து அதை நாட்டை ஆத்திரமூட்டியுள்ளது. வட கொரியாவை அமெரிக்கா அழிக்க விரும்பினால் அதை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும் எனவும் ரஸ்ய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.**

---

**11ம் பக்கத்தொடர்ச்சி...**

என்பன தமிழரசுக் கட்சியுடனான கொண்டுள்ள முறுகல் நிலையும் ஆகும்.

இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயமென்னவெனில், தமிழரசுக் கட்சிக்கு கூட்டமைப்புக்குள்ளும் வெளியிலும் தோன்றியுள்ள எதிர்ப்பு கொள்கை சார்ந்ததா என்பதும், நீடித்து நிலைக்கக் கூடியதா என்பதுமாகும்.

ஏனெனில் தமிழரசுக் கட்சியுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த அல்லது வகிக்கின்ற ஏனைய மூன்று கட்சிகளையும் பொறுத்தவரை அவைகளுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் எந்தவிதமான கொள்கை வேறுபாடுகளும் இல்லை. எல்லாமே பிற்போக்கு தமிழ் தேசியவாதத்தை வரித்துக் கொண்ட கட்சிகள்தான்.

அதேபோல, தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வெளியே தமிழரசுக் கட்சித் தலைமையை எதிர்க்கின்ற வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் பேரவை, வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்பனவற்றைப் பொறுத்தவரையிலும் கூட, அவை தமிழரசுக் கட்சியிலிருந்து மாறுபாடான கொள்கை எதனையும் கொண்டிருக்கவில்லை. அவையும் பிற்போக்கு தமிழ் தேசியவாதத்தை வரித்துக் கொண்ட கட்சிகள்தான்.

இந்தக் கட்சிகள் எல்லாம் பிற்போக்கு தமிழ் தேசியவாதக் கட்சிகள் என்பதுடன் மட்டும் நிற்பனவல்ல. இவைகளின் உலக நோக்கு ஏகாதிபத்திய சார்பானதாகும். தேசிய நோக்கு படுபிற்போக்கான ஐ.தே.க. சார்பானதாகும்.

தற்போது செயற்படுகின்ற தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) மட்டுமே சற்று வித்தியாசமான, விதிவிலக்கான கட்சியாகும்.

எனவே தமிழரசுக் கட்சியுடன் அதன் பங்காளிக் கட்சிகளோ அல்லது இதர தமிழ் தேசியவாதக் கட்சிகளோ கொண்டுள்ள முரண்பாடு தனிப்பட்ட அல்லது குழு நலன் சார்ந்த முரண்பாடுகளே தவிர, கொள்கை சார்ந்ததோ அல்லது தமிழ் மக்களின் தேசிய நலன் சார்ந்ததோ அல்ல.

தமிழரசுக் கட்சியை ஒழிக்கக் கோருபவர்கள் இன்னொரு வடிவத்தில் அதன் கொள்கைகளைத் தொடரப் போகின்றவர்கள்தான். அதனால் தமிழ் மக்களுக்கு எந்தப் பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை. தமிழ் மக்களுக்கு இன்று தேவை பிற்போக்கான தமிழ் தேசியவாதத்திற்கு மாற்றான ஒரு கொள்கையும், அதை உறுதியுடன் முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒரு புதிய தலைமையும்தான்.

இருப்பினும் இப்பொழுது இனவாத, பிற்போக்கு தமிழரசுக் கட்சிக்கு எதிராகத் தோன்றியுள்ள எதிர்ப்பு வரவேற்கப்பட வேண்டிய ஒன்று என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அது மேலும் வளர்க்கப்பட வேண்டும். அதேநேரத்தில் அந்த எதிர்ப்பு இன்னொரு தமிழரசுக் கட்சியை உருவாக்குவதில் போய் முடியக்கூடாது. பதிலாக தமிழ் மக்களை இனவாத எதிர்ப்பு, பிற்போக்கு எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, என்பனவற்றின் அடிப்படையிலான முற்போக்குத் திசை வழியில் வழி நடாத்திச் செல்வதாக இருக்க வேண்டும்.

இந்த இடத்தில் 1975ஆம் ஆண்டு மார்ச்சிஸ்ட் – லெனினிஸ்ட கம்யூனிஸ்ட்டுகள் தமிழ் மக்களுக்காக முன்மொழிந்த பரந்துபட்ட 'தமிழ் மக்களின் ஜனநாயக முன்னணி'யின் அவசியம் பற்றி உண்மையான தமிழ் தேசியவாத சக்திகள் கவனத்தில் கொள்வது காலப் பொருத்தமானதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும்.

முன்பக்கத் தொடர்ச்சி…

எடுத்துக் காட்டுகின்றன. அந்தக் குழறுபடிகள் காரணமாக பல கட்சிகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இந்த நிராகரிப்புக்குக் காரணம் வேட்பு மனுக்களில் உள்ள தவறுகள் எனத் தேர்தல் திணைக்களம் கூறுகிறது.

அந்த அளவுக்கு இந்த வேட்பு மனுக்களைத் தயாரிக்கும் முறையை தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் நிலை போல தேர்தல் திணைக்களம் உருவாக்கி வைத்திருக்கிறது. எப்படித் தயாரித்தாலும் எங்காவது ஒரு தவறை விடும் வகையில் இந்த வேட்பு மனுக்கள் தயாரிக்கும் முறை உருவாக்கி வைக்கப்பட்டுள்ளது. அனுபவம் மிக்க சட்டத்தரணிகளாலேயே இந்த வேட்பு மனுக்களைச் சரியாகத் தயாரிக்க முடியவில்லை எனில், சாதாரண மக்கள் எம்மாத்திரம்.

சாதாரணமாக மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியடையாவிட்டால் இன்னும் ஒன்றிரண்டு சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதைப் போல, தேர்தல் வேட்பு மனுக்கள் தயாரிப்பில் பெரும் மோசடிகள் தவிர்ந்த வேறு சிறு தவறுகள் நிகழ்ந்திருந்தால், சம்பந்தப்பட்ட கட்சிகள் அவற்றைத் திருத்தி அமைத்து மீளவும் அந்த மனுவைச் சமர்ப்பிக்க வாய்ப்பளித்தால் ஜனநாயகத்துக்கு என்ன கேடு வந்துவிடப் போகின்றது? அவ்வாறில்லாமல் ஒரு சிறு தவறுக்காக வேட்பு மனுவை நிராகரிப்பது ஜனநாயகப் படுகொலையல்லவா? இந்த வேட்பு மனுத் தயாரிப்பு ஒரு சூதாட்டம் போலல்லவா இருக்கிறது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, எப்படியோ தொடர்ச்சியான வலியுறுத்தலால் உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடாத்துவதற்கான முடிவு அறிவிக்கப்பட்டு, கட்சிகளும் பிரச்சாரத்தில் ஈடுபட ஆரம்பித்துவிட்டன.

இந்தத் தேர்தல் ஆட்சி மாற்றத்துக்கான ஒன்று அல்லாவிடினும், இதன் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. ஏனெனில், முதற்தடவையாக அந்நிய சக்திகள் இலங்கையின் இரண்டு எதிரெதிரான பிரதான கட்சிகளை வலிந்திணைத்து தமக்கு சார்பான அரசொன்றை ஆட்சியில் அமர்த்திய பின்னர் நடைபெறும் தேர்தலாகும்.

அதேநேரத்தில் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது சொந்தக் கட்சிக்குத் துரோகம் இழைத்து, கட்சியின் பரம விரோதியான ஐ.தே.க. உடன் இணைந்து கூட்டரசாங்கம் ஒன்றை நடாத்தும் சூழ்நிலையில் நடைபெறும் தேர்தலுமாகும்.

இந்த அரசியல் பின்னணிகள் ஒருபுறமிருக்க, இந்த அரசாங்கம் நாட்டின் அபிவிருத்திகளை இடைநிறுத்தி, விலைவாசிகளை அதிகரித்து, அரச சேவைகள், கல்வி, சுகாதாரம், அரச சொத்துகள் என்பனவற்றை தனியார்மயப்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்ற ஒரு சூழலில் இடம் பெறுகின்ற ஒரு தேர்தலுமாகும். இவையும் இதுபோன்ற இன்னும் மக்கள் விரோத, தேச விரோத நடவடிக்கைகளால் இந்தத் தேர்தல் ஒரு நாடாளுமன்றத் தேர்தலுக்குரிய முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

அந்த வகையில் இந்தத் தேர்தல் முடிவுகள் 'நல்லாட்சி' என்று சொல்லப்படுகின்ற இந்த அரசாங்கத்தைப் பற்றி மக்கள் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தப் போகின்ற ஒரு தேர்தலுமாகும். அதேவேளையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியினர் தமது பாரம்பரியக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு பிறிதொரு கட்சியில் களம் இறங்கியுள்ள தேர்தல் ஆகையால் அவர்களை மக்கள் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதையும் வெளிப்படுத்தப் போகின்ற தேர்தல் ஆகும்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற ரணில் தலைமையிலான ஐ.தே.கவும், மைத்திரி தலைமையிலான சிறீ.ல.சு.கவும் இத்தேர்தலில் இரு வேறு அணிகளாகப் போட்டியிட்டாலும், இரண்டு தரப்புக்கும் பொதுவான எதிரி மகிந்த தலைமையிலான பொது எதிரணி என்பதில் சந்தேகம் இல்லை. எனவே, தம்மில் ஒருவர் வென்று ஒருவர் தோற்றாலும் பரவாயில்லை, மகிந்த அணி வெற்றிபெற்று விடக்கூடாது என்பதிலேயே இரு அணியினரும் கண்ணாய் இருப்பர். அரச அதிகாரம் அவர்களது கைகளில் இருப்பதால், சகல வளங்களையும் பொது எதிரணிக்கு எதிராகப் பயன்படுத்தவும் அவர்கள் தயங்கமாட்டார்கள்.

ஆகையால் நாட்டு மக்களைப் பொறுத்தவரை இந்தத் தேர்தலில் நிறைவேற்ற வேண்டிய பாரிய பணி ஒன்று உள்ளது. அதாவது இந்த மக்கள் விரோத, தேச விரோத அரசாங்கத்துக்கு எதிராகத் தமது ஒவ்வொரு வாக்குகளையும் பயன்படுத்தி அவர்களைத் தோற்கடிக்க வேண்டிய நேரம் இது.

அவர்கள் இந்த அரசை நடாத்திச் செல்கின்ற இரண்டு பிரதான கட்சிகளையும் இந்தத் தேர்தலில் தோற்கடிப்பதின் மூலம், அரசாங்கத்தின் மக்கள் விரோத, தேச விரோத நடவடிக்கைகளை நிறுத்தும்படி ஒரு எச்சரிக்கையைக் கொடுக்க முடியும். அதேநேரத்தில் இந்த அரசின் இரண்டு பிரதான சாரதிகளை மட்டும் அன்றி, இந்த அரசைப் பதவிக்குக் கொண்டு வரவும், அதைப் பாதுகாக்கவும் தொடர்ந்து செயற்படும் நேரடி மறைமுகப் பங்காளிகளையும் இந்தத் தேர்தலில் மக்கள் தோற்கடிக்க வேண்டும்.

அதாவது, சிங்களப் பேரினவாதக் கட்சிகளை ஆதரிக்க மாட்டோம் என்று சொல்லிக் கொண்டு இந்த அரசாங்கத்தை பதவிக்குக் கொண்டு வந்ததுடன், எதிர்க்கட்சிப் பதவியில் இருந்து கொண்டு இந்த அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து ஆதரித்துக் கொண்டிருக்கின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பையும், இந்த அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டுவர ஒத்துழைத்ததுடன், இந்த அரசின் நடவடிக்கைகளை மறைமுகமாக ஆதரித்துக் கொண்டிருக்கும் ஜே.வி.பியையும் கூட மக்கள் இந்தத் தேர்தலில் தோற்கடிப்பது அவர்களது கடமையாகும்.

வாராது வந்த இந்தத் தேர்தலை மக்கள் சரியான முறையில் பயன்படுத்தி இந்த 'நல்லாட்சி' அரசின் மக்கள் விரோத, தேச விரோத நடவடிக்கைகளுக்கு கடிவாளம் போடாமல் அசமந்தமாக இருந்தார்களானால், அவர்களால் என்றென்றைக்கும் இருளில் மூழ்கி இருக்க வேண்டிய சூழலே உருவாகும். எனவே நாட்டு மக்கள் அனைவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் சிந்தித்து செயற்படுவது அவசியமாகும்.

---

முதலாளியத்தை திரும்பக் கொண்டு வரும் சாத்தியப்பாட்டுக்கான நிலைமைகள் நமது சோவியத் நாட்டில் உள்ளனவா? ஆம், உள்ளன, இது விந்தையாகத் தோன்றலாம் தோழர்களே, ஆனால் இது ஒரு உண்மை. நாம் முதலாளியத்தை தூக்கி எறிந்துள்ளோம்; பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிறுவியுள்ளோம்; நமது சோசலிசத் தொழிலை விரைவாக வளர்த்து வருகிறோம்; அதனுடன் உழவர் பொருளாதாரத்தை இணைத்து வருகிறோம். ஆயினும் நாம் முதலாளியத்தின் வேர்களை பிடுங்கி எறிந்துவிடவில்லை. இந்த வேர்கள் எங்கு புதைந்து கிடக்கின்றன? அவை சரக்கு உற்பத்தியில், நகரங்களிலும் குறிப்பாக நாட்டுப்புறத்திலும் உள்ள சிறு உற்பத்தியில் புதைந்து கிடக்கின்றன.

**–ஸ்டாலின்**

# கட்சி தாவினால் இலஞ்சமாக அமைச்சுப் பதவி பெறலாம்!

உள்ளூராட்சித் தேர்தலில் தம்முடன் இணைந்து போட்டியிட மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணி முன்வரவில்லை எனக் கண்டதும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கூட்டு எதிரணியிலுள்ளவர்களை கட்சி தாவும் கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்க ஆரம்பித்துள்ளார்.

அந்த வகையில் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியில் இருந்த சிலர் அண்மையில் மைத்திரியின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைய வைக்கப்பட்டுள்ளனர்.

அதன் பின்னர் கடந்த பொதுத் தேர்தலில் திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற எதிரணித் தலைவர் தினேஸ் தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி (எம்.ஈ.பி) நாடாளுமன்ற உறுப்பினர் சிறியானி விஜஜேவிக்கிரமே கட்சி மாற வைக்கப்பட்டு, அவருக்கு உடனடியாகவே மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதியமைச்சர் பதவி மைத்திரியால் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த அநாகரிகமான நடைமுறை, கட்சி தாவுபவர்களுக்கு இலஞ்சமாக அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என்ற நிலையைச் சூசகமாக வெளிப்படுத்தி உள்ளது. இப்படிப் பதவி ஆசை காட்டுவதன் மூலம் கூட்டு எதிரணியில் உள்ள மேலும் சிலரை தனது பக்கம் இழுக்க மைத்திரி




முயற்சிப்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

கடந்த பொதுத் தேர்தலின் போது தாம் பதவிக்கு வந்தால் அமைச்சர்களின் எண்ணிக்கை நாற்பதாகக் குறைக்கப்படும் என இன்றைய 'நல்லாட்சி' ஆட்சியாளர்கள் மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தனர். ஆனால் ஏற்கெனவே அமைச்சர்களின் தொகை நூறைத் தாண்டியுள்ள நிலையில் இவ்வாறாகக் கட்சி தாவுபவர்களுக்கும் அமைச்சுப் பதவி வழங்க ஆரம்பித்தால், இந்தச் சூதாட்டம் எங்கே போய் முடியப் போகிறது?

கூட்டு எதிரணியைச் சேர்ந்தவர்களை மட்டுமின்றி பதுளை மாவட்டத்தில் ஐ.தே.கவைச் சேர்ந்த சிலரும் மைத்திரி முன்னலையில் கட்சி தாவ வைக்கப்பட்டுள்ளனர்.

அதிகாரத்தைக் தக்க வைத்துக் கொள்ள மேற்கொள்ளப்படும் இந்த வகையான கட்சி தாவல் நடவடிக்கைகளால் ஆட்சியிலுள்ளவர்கள் ஒருபோதும் தமது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது என்பதை மக்கள் உரிய தருணத்தில் அதிகாரத்திலுள்ளவர்களுக்குப் புரிய வைத்தே தீருவர்.

# ஜனாதிபதியும், இரு அமைச்சர்களும் பதவி விலக வேண்டும்! ஜே.வி.பி. உறுப்பினர் வலியுறுத்து!!

ஜனாதிபதியும் இரு அமைச்சர்களும் கட்டாயமாகப் பதவி விலக வேண்டும் என வரவு செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் பங்குபற்றி உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க வலியுறுத்திக் கூறியிருக்கிறார். அதற்கான பின்வரும் காரணங்களையும் அவர் தெரிவித்திருக்கிறார். அவையாவன:

ஐ.தே.கவைச் சேர்ந்த அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் கீழுள்ள சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சுக்கு 2017இற்கான வரவு செலவுத் திட்டத்தில் 19,782 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதாகவும், ஆனால் அதில் 2017 செப்ரெம்பர் 30 வரை 6,000 மில்லியன் ரூபா மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகவும், மிகுதிப்பணம் செலவழிக்கப்படாமல் திறைசேரிக்குத் திரும்பிவிட்டதாகவும் ரத்னாயக்க குறிப்பிட்டிருக்கிறார்.

அதேபோல, ஜனாதிபதியின் கீழுள்ள தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சுக்கு 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 3,532 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதாகவும், அதில் 325 மில்லியன் ரூபா மட்டுமே – அதாவது 9 சதவீதம் - பயன்படுத்தப் பட்டதாகவும், மிகுதி திரும்பிவிட்டதாகவும் ரத்னாயக்க குறிப்பிட்டிருக்கிறார்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்தாமல் திருப்பியது சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் தவறு என்றும், எனவே சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் அவர்களுக்குப் பொறுப்பான ஜனாதிபதியும் தமது தவறை ஏற்றுப் பதவி விலக வேண்டும் என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க கோரியிருக்கிறார்.

---

*சிறு உடமையாளனுக்கு இரண்டு மனங்கள். ஒன்று பாட்டாளிவர்க்க மனம்; மற்றொன்று சொத்துடமை மனம்.*

***-லெனின்***

# இலங்கைக்கு வெளிநாட்டில் இருந்து தொழிலாளர் இறக்குமதி!

'இருக்கிற செல்வத்தை வீசியெறிந்திட்டு வயிற்றுப்பிழைப்புக்கு பிச்சை எடுக்கிறான்' என்று சிலரின் நடவடிக்கை குறித்து சொல்லப்படுவதுண்டு. இலங்கையின் தற்போதைய அரசாங்கமும் அந்த நிலையில்தான் இருக்கின்றது.

1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பின்பற்றிய விதேசிய சார்புக் கொள்கைகள் காரணமாகவும், அவரது அரசு பின்பற்றிய திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாகவும், நாட்டின் உற்பத்தி வீழ்ச்சி அடைந்து, தொழில் வாய்ப்புகள் அருகி, அதன் காரணமாகப் பலர் நாட்டை விட்டு வெளியேறி, மத்திய கிழக்கு நாடுகளில் கூலி வேலைகளுக்குச் சென்றனர். அந்த நிலை காரணமாக இன்றும் கூட சுமார் 10 இலட்சம் இலங்கையர்கள் சொல்லொணா துன்பங்களுக்கு மத்தியில் மத்திய கிழக்கு நாடுகளில் பணி புரிந்து வருகின்றனர்.

பின்னர், இனப் பிரச்சினையை தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமாக ஜே.ஆர் அரச மாற்றியதின் காரணமாக பல இலட்சம் தமிழ் மக்கள் பாதுகாப்புத் தேடி மேற்கு நாடுகளில் சரண் புகுந்தனர். அந்தத் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது.

இந்த நிலைமையில், இலங்கையில் பணிபுரிவதற்கு வெளிநாடுகளில் இருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்யப் போவதாகவும், அதற்கு இலங்கையின் குடிவரவு குடியகல்வு இலாகா தயாராக இருக்க வேண்டும் எனவும், 'நல்லாட்சி' அரசாங்கத்தின் அமைச்சரொருவர் அண்மையில் சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார்.

இதைப் பார்க்க அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. ஏனெனில் இலங்கையர்களே நாட்டில் போதிய வேலைவாய்ப்பு இல்லாமல் திண்டாடுகின்றனர். விலைவாசிகளோ கட்டுக்கடங்காமல் ஏறிச் செல்கிறது. விவசாயிகளின் உற்பத்திச் செலவுகள் வரவை மிஞ்சி இருப்பதுடன், தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமலும் திணறுகின்றனர். பட்டதாரிகளே படித்து முடித்தும் வேலை கிடைக்காமல் வருடக்கணக்கில் காத்திருக்கின்றனர். போதாக்குறைக்கு முன்னைய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் நிறுத்தப்பட்டு, அவற்றில் பணி புரிந்த பல்லாயிரக்கணக்கானோர் வீதிக்கு விரட்டப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து இலங்கையில் வேலை செய்வதற்கு ஆட்களை வரவழைப்பதானால், இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் சொன்ன கூற்றுத்தான் இன்றைய அரசுக்கும் பொருத்தமாக இருக்கும்.

# ஊடகங்கள் மீது அமைச்சர் மங்கள பாய்ச்சல்!

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசிய நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர, ஊடகங்களின் தலைவர்களையும், அவற்றின் ஆசிரியர்களையும் கடுமையாகச் சாடியிருக்கிறார். அவரது கோபத்துக்குக் காரணம், சமீபத்தில் யுனெஸ்கோ (Unesco) ஆதரவுடன் நடைபெற்ற ஒரு கருத்தரங்கிற்கு அவர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்தும் அவர்கள் யாரும் அதில் கலந்து கொள்ளாததே.

இதுபற்றிக் குறிப்பிட்ட அமைச்சர் மங்கள, "பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவர்கள் கலந்து கொள்ளாதது குறித்துக் கேள்வி எழுப்பினார். இதுபற்றி நான் விசாரித்த போது ஊடகங்களின் தலைவர்கள் மற்றும் அவற்றின் ஆசிரியர்கள் எல்லோருக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டது தெரிய வந்தது. இருந்தும் அவர்கள் அதில் கலந்து கொள்ளவில்லை" எனக் குறிப்பிட்டார்.

இதுபற்றி மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், இது அரசியல் அல்ல, ஊடகம் சம்பந்தமானது எனக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், "உண்மை என்னவென்றால் சில ஊடகங்களின் தலைவர்கள் நாட்டை முன்னைய சகாப்தத்திற்கு பின்தள்ளப் பார்க்கிறார்கள். சில பத்திரிகைகள் பொய்ச் செய்திகளைப் பிரசுரிக்கின்றன" என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், தனியார் ஊடகங்களுடன் ஒப்பிடுகையில் அரச ஊடகங்கள் முன்னேற்றகரமாக இருப்பதுடன், பக்கச்சார்பற்ற முறையில் செய்திகளை வெளியிடுகின்றன என்றும், தனியார் ஊடகங்களைக் கவனிப்பதற்கு முன்னால் அரச ஊடகங்களை முன்னேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும் எனப் பலர் கூறுவதாகவும் தெரிவித்தார்.

ஆனால் அமைச்சர் மங்கள இப்படி தனியார் ஊடகங்களைத் தாக்கினாலும், இன்றைய அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டு வருவதில் அவைதான் பெரும் பங்களிப்புச் செய்தன என்பதை அவர் மறுக்க முடியாது. மகிந்த ராஜபக்சவின் முன்னைய அரசு ஊடக சுதந்திரத்தை நசுக்குகிறது, ஊடகவியலாளர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கிறது எனப் பெருமெடுப்பில் பிரச்சாரம் செய்தே இன்றைய அரசு பதவிக்கு வந்தது.



ஆனால் உண்மை என்னவெனில், இந்த 'நல்லாட்சி' அரசு பதவிக்கு வந்த பின்னர் தனது மக்கள் விரோதச் செயற்பாடுகளை மறைப்பதற்காக ஊடகங்களைக் கட்டுப்படுத்த முற்பட்டதினால் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு அரசுக்கும் ஊடகங்களுக்கும் இடையில் பாரிய விரிசல் ஏற்பட்டது. ஜனாதிபதி, பிரதமர், ஊடக அமைச்சர், இதர அமைச்சர்கள் என எல்லோருமே அடிக்கடி ஊடகங்களைத் திட்டுவதிலேயே காலத்தைக் கழித்து வருகின்றனர்.

அதுமட்டுமின்றி, இந்த அரசின் கீழேயே ஊடகவியலாளர்கள் காவல்துறையினரால் தாக்கப்பட்டும் வருகின்றனர்.

–பீ.வீ